உ

# திருவள்ளுவர்

# ஒரு துறைக்கோவை

## [சிலேடைக் குறிப்புக்களுடன்]

துறை—நாணிக்கண் புதைத்தல்


மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையரவர்கள் சீடனும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பரீக்ஷகருள் ஒருவனும்
முன்னைப் பாடசாலைப் பரிசோதகனும்
பொருளதிகார ஆராய்ச்சி, தனிப்பாக்கோவை,
விநாயகர் முருகர் திருவாரூர்த் தியாகர் மீது
தனித்தனித் துதிப்பாக் கோவைகள்,
சங்கரர் ஆற்றுப்படையும், தூதும்,
மணிவாசகர் இ[illegible] மேற்
பிள்ளைத்தமி[illegible]மினி
இவற்றின் ஆசிரியருமான
கஜாரண்யத திராவிடக கவிமணி

**வே. முத்துஸாமி ஐயர்** எம். ஏ., எல். டி.


இயற்றியது.


ஸ்ரீ மகாபாரதம் அச்சகம், கும்பகோணம்.



பதிப்பின உரிமை யார்க்கும் உரியது.



1950

இதன் விலை அணா. பத்து.

## சில பாராட்டுரைகள்

**1. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்** *அநுக்ரகம் :—* பரமேசுவர ஸ்தோத்ரம் ஆசாரிய ஸ்தோத்ரம் முதலியவைகளைப் பல தடவைகளிற் பாடினதை அங்கீகரித்து, தங்களை, கஜாரண்ய திராவிட கவிமணி என்ற விருதால் அநுக்ரகித்திருக்கிறோம்

**2. சேது** சமஸ்தான மகா வித்வான் **ஸ்ரீ ரா. இராகவையங்கார்** அவர்கள் :—

ஆங்கிலத்திற் சீர்த்த அறிவோன் தமிழ்க்கடலில்
ஈங்குளத்திற் றோய்ந்துசிறப் பெய்தியோன்—ஓங்கும்
திருமுத்துச் சாமி செழுங்கவிக்குத் தூய
பெருமுத்துச் சாமியம என் பேம். (சாமியம்—சமம்)

**3.** மதுரைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ N. R. **கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார்** B.A.B.L., அவர்கள் :— I read your ஒருதுறைக் கோவை. The idea is good, the conception ennobling and the achievement wonderful. You have worked up to the ideal and finished the work like a jeweller.

**4. ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர் அவர்கள்** B.O.L., கலைமகள் ஆசிரியர், சென்னை :—தங்கள் திருவள்ளுவர் ஒருதுறைக் கோவையின் சுவையைப் பலரும் அறிந்துகொள்ள வைத்தது நல்ல காரியம். மிகவும் நன்றாக அமைந்த இந்நூல் புலவர் பெருமக்களின் பாராட்டுக்கு உரியதாகும்.

**5.** ஸ்ரீ Rao Saheb S. **வையாபுரிப் பிள்ளை** B.A.,B.L., அவர்கள், முன்னைப் பல் கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர், சென்னை :—செய்யுட்களெல்லாம செம்பாகமாக அமைந்துள. மிகச் சுவையுடையன. இவற்றில் பழமையும் புதுமையும கலந்து மிளிர்கின்றன.

**6.** ஸ்ரீ S. **இராமஸாமி நாயுடு** அவர்கள், முன்னைய மேயர், சென்னை :—ஓய்வுபெற்றிருக்கும் நாட்களில், ஓயாது தமிழ் இலக்கியங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, கவிகள் பல இயற்றிவரும் முறையைக் கண்டு பெரிதும பாராட்டுகின்றேன்.

**7. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராகவன்** M. A. அவர்கள், ஆங்கிலப் பேராசியர், சென்னை :—தாங்கள் மரபில் ஊன்றிநின்று பாடுகிறீர்கள். தங்கள் பணி பழமையின் பெருமையை நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

# திருவள்ளுவர்
# ஒரு துறைக்கோவை

[சிலேடைக் குறிப்புக்களுடன்]

துறை—நாணிக்கண் புதைத்தல்

மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையரவர்கள் சீடனும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின பரீக்ஷகருள் ஒருவனும்
முன்னைப் பாடசாலைப் பரிசோதகரும்
பொருளதிகார ஆராய்ச்சி, தனிப்பாக்கோவை,
விநாயகர் முருகர் திருவாரூர்த் தியாகர் மீது
தனித்தனித் துதிபாக் கோவைகள்,
சங்கரர் ஆற்றுப்படையும், தூதும்,
மணிவாசகர் இராமாநுஜன் மேற்
பிள்ளைத்தமிழ், பதமினி
இவற்றின் ஆசிரியருமான

கஜாரண்யத் திராவிடக் கவிமணி
**வே. முத்துஸாமி ஐயர்** எம். ஏ., எல். டி.
இயற்றியது.

---

ஸ்ரீ மகாபாரதம் அச்சகம், கும்பகோணம்.

பதிப்பின் உரிமை யார்க்கும் உரியது.

**1950**

இதன் விலை அணா பத்து.

# நூன்முகம்

இந்நூல் திருவள்ளுவர் மீது, நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரே துறையில், திருக்குறளின் ஓரோர் அதிகாரப்பெயரும் ஒரு கவித் துறையில் வரும் 133 கவிகளைக் கொண்டது. முன்னிரண்டடிகள், ஒரு குறட்கருத்தைத் தழுவி, இத்தகைய வள்ளுவர் நாடடுத் தலைவீ என விளிக்கும். பின்னிரண்டடிகள், தலைவி நாணிநிற்றலைக் கூறலோடு, சிலேடைப்பொருள் ஒன்றும் பயக்கும்.

2. கோவை தமிழ்ப் பிரபந்தங்களில் ஒன்று; பெரும்பாலும் 400 கலித்துறைகள் கொண்டது; இதில் அகப் பொருளின் துறைகள் எல்லாம் கவிக்கு ஒன்றாக அமையும். இத்தகைய கோவைகள் வழக்கில் மிகச்சில, திருச்சிற்றம்பலக் கோவை, தஞ்சைவாணன் கோவை இவை பிரசித்தம். சில கோவைகள் ஒரே துறையில் உள. இரகுநாத சேதுபதி மீது, அமிர்த கவிராயர் நாணிக்கண்புதைத்தலிற் பாடிய கோவை சிறப்பானது. வேறு துறையிலும் சமத்தாரப் புலவர் சிலர் பாடிய சில கோவைகள் அருகி வழங்குகின்றன; இவற்றாலும், "யானையும் பாடிக் கோவை பாடுக" என்னும் பழமொழியாலும், கோவையின் அருமை அறியலாகும்.

3. எளியேனுக்குத் திருவள்ளுவர்மீது ஒரே துறையில் ஒரு கோவை பாட நெடுங்காலமாக ஆசை. நாயனார்மீது சோமேசர் முதுமொழிவெண்பா முதலியன பண்டும், குமரேசவெண்பா முதலியன இன்றும் தோன்றியுள. பூமிக்குப் பொதுப் புலவராகிய இவ்வள்ளுவரைத் தமிழ்நாடு, பாரதியார் பாடியாங்கு, 'உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது'. இவர்மீது சிறுமதியேன், சில மதிகளாக முயன்று இதைப் பாடி முடித்தேன்.

4. இவ்வாண்டின் துவக்கத்தில் 'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர், கல்கத்தாவிற் பாரதியார் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்திய சொன்னுரைகளில், சிறிதேனும் ஒட்டிப் பேசும் பேறு பெற்றேன். அவர் அங்கு என்னையும் இக்கோவையையும் அறிமுகப்படுத்தியதன் பயனாக, அச்சங்கச் சிறப்புக் கூட்டம் ஒன்றில், இதிற் சில கவிகள் விளக்கப்பெற்றன.

5. பாக்களின் கருத்தமைதி பற்றி ஒரு வார்த்தை: காதலின் தூய்மையைக் காட்ட, சில கவிகளில் தலைவிக்கு விநாயகர், முருகன், சிவபிரான், திருமால், திருமகள், நாமகள், சீதை, சாவித்திரி, அகத்தியர், சம்பந்தர், கம்பர், காந்தியடிகள் முதலியோர் உவமையாவர். வேறு சிலவற்றில் வேங்கடம் காளத்தி, ஆலவாய் பரங்கிரி, இலக்கியம் இலக்கணம், காவியம் நாடகம், சமன் வாரண்டு முதலிய இணைப்பெயர்கள் இசைந்து பயிலும். இடையிடை, வள்ளுவரைப் போற்றும் வகையில் தொடை, தொனி முதலிய நயங்களை அமைக்கவும் முயன்றுளேன்.

6. நூலை முழுதும் பார்த்து உதவிய சென்னை, தணிகைமணி, இராவ் பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ., புதுக்கோட்டைக் கவிராஜ பண்டிதர் வித்வான் நா. கனகராஜையர் பி. ஓ. எல். இவ் இருவர்க்கும் என் நண்பு கசிந்த நன்றி. சிற்சில கவிகளைப் பார்த்தும் கேட்டும் ஊக்கிய உயர்திரு. ஆராய்ச்சியாளர் இராவ் சாகிபு எஸ். வையாபுரிப் பிள்ளை, பேராசிரியர் R. P. சேதுப்பிள்ளை வித்வான். கி. வா. ஜகந்நாதையர், இரஸிகர் T. M. பாஸ்கரத் தொண்டைமான், தஞ்சை. ஸப்மாஜிஸ்ட்ரேட் S. இராமசந்திர பத்தர் முதலிய நல்லறிஞர்கட்கு என் மதிப்பு மருவிய வந்தனை. திருவள்ளுவர் படம் உதவி, தம் வேலை மிகுதிக்கிடையே, இந்நூலை நன்கு அச்சிட்டளித்த குடந்தை மகாபாரதம் அச்சுக்கூடத்தின் உரிமையாளர் அன்பர் ஸ்ரீ S. சிவராமகிருஷ்ண ஐயருக்கும் எனது நன்றி உரியதாகும்.

7. ஒருவாறு இங்ஙனம் உருவான இந்நூலைத் திருமயிலைக் கோயிலுள்ளும், செந்தமிழ்வாணர் சிந்தையுள்ளும், சிறப்ப அருள் சுரந்து வீற்றிருக்கும் செந்நாப் போதார் பொன்னார் திருவடிகளிற் புல்லிய கையுறையாக்கி வணங்குகின்றேன். ஏழையேன் சிறுமையையும் இலக்கின் பெருமையையும் கருதி, கூர்மதிப் புலவர்கள் குணங்கொண்டு குற்றம் பொறுப்பார்களாக.

வள்ளுவர் வகுத்த மாண்புசால் அறநெறி
உள்ளுவர் வாழியே ஓங்குக உலகே.

அரங்கநாதபுரம்
5—8—50

இங்ஙனம், தண்டமிழ்த் தொண்டன்,
வே. முத்துஸாமி ஐயன்.

## சாற்றுக் கவிகள்

1. உயர்திரு கவிமணி S. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள், புதுதேரி.

உள்ளுவந்து போற்றி ஒருதுறைக் கோவைதிரு
வள்ளுவர்மே லன்பால் வனைந்தளித்தான் -தெள்ளுதமிழ்ப்
பண்பு மலிந்தொழுகப் பாடுமுத்து சாமிப்பேர்
நண்பன் கவிமணியின் நாள்.

2. ,, வித்வான் * கி. வா. ஜகந்நாதையர் அவர்கள் B.O.L.
கலைமகள் பத்திரிகாசிரியர், சென்னை.

வள்ளுவர்மேல் நாணிக்கண் புதைத்தலெனும்
ஒருதுறையில் வருத்தோர் கோவைத்
தெள்ளியநூல் திராவிடநற் கவிமணிமுத் துச்சாமிச்
செம்மல் ஈந்தான்;
கள்ளிருக்கும் தேனிருக்கும் அமுதிருக்கும்
படியிதன்பாற் கவிகள் வாய்க்கும்;
உள்ளிருக்கும் தொனியிருக்கும் குறிப்பிருக்கும்
படித்தறிவார் உணர லாமே.

3. ,, தணிகைமணி, இராவ பகதூர் V. S. செங்கல்வராய பிள்ளை அவர்கள் M. A., சென்னை.

இத்தகை நூலொன் றிதுவரை யாங்கண்ட தில்லை, உண்மை;
வித்தக நூலிது; வள்ளுவர் கோவை விளம்புமிது;
புத்தியின் நல்வழி காட்டிப் பயன்தரும் பொற்பினது;
முத்தமிழ்ச் சித்திரம் எல்லாம் விளங்கும் முதன்மையதே.

4. ,, இராவ் சாகிபு K. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B.A., Controller of Emigration, சென்னை.

சீரும் சிறப்பும் திருவள் ளுவர்பாற் றிகழ்தரவே
ஓரும் சுவைசேர் ஒருதுறை கோவை உரைபுலவன்
தேரும் சிலேடைத தனந்தரு செல்வன் திருமறையோன்
பேரும் புகழும் பெறுமுத்து சாமிப் பெரியவனே.

---

* சென்னைப் பல்கலைக் கழகத்து ரூ. 1000 பரிசுபெற்றவர்.

5. ,, பரம்பரைபபுலமைவாய்ந்த பண்டிதர்*, வித்வான்‡ தி. சங்குப் புலவர் அவர்கள், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திருக்குறளின் அதிகாரப் பேருமொரு
குறட்கருத்தும் தெரிய வைத்துப்
பெருகஇயசீர் வள்ளுவரைத் தலைவரெனக்
கொண்டுபொருள் பேசுங் கோவை
உருக்கமுற நாணிக்கண் புதைத்தலெனும்
ஒருதுறையில் உவப்பச் சொற்றான்
செருக்கடையாத் திராவிடத்தின் கவிமணிமுத் துச்சாமிச்
சீலன் மன்னோ.

6. ,, கவிராஜ பண்டிதர் † N. கனகராஜ ஐயர் அவாகள் B.O.L., மகாராஜா காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவர், புதுக்கோட்டை.

மயிலைப் புலவர் பிரான்வள் ளுவர்தம் மனமறிந்த
இயலைத் தெளிக்கும் ஒருதுறைக் கோவை இயம்பினனால்
மயலைப் பழித்த மனத்து மறையவன் வாழ்வுமலி
செயலைப் பொறுத்த தமிழ்முத்து சாமியாம் சீர்த்தியனே.

7. ,, நூலாசிரியர் மைந்தன் சி. பாலகவி மு. கோ. இராமன் :—

தள்ளரிய நீதித் தனிக்குறள்நூல் சாற்றுதிரு
வள்ளுவர் கோவை வகுத்தளித்தான்—ஒள்ளியதீம்
பாமுத்து முத்தாப் பகரும் கவிமணியாம்
வே. முத்து சாமியெந்தை வேய்ந்து.

---

*மதுரைத் தமிழ்ச்சங்கத்துப பண்டிதப் பட்டமும பொற்றோடாவும் பெற்றவர்.

‡ சென்னைப பல்கலைக் கழகத்து ரூ. 1000 பரிசு பெற்றவர்.

## திருமயிலைத் திருக்கோவிலில் அமர்ந்து விளங்கும்
## திருவள்ளுவ நாயனுர் திருவுருவம்.



### நேரிசை வெண்பா

சொலரிய நீதியெலாம் தூய திருக்குறளில்
நலஞ்சிறக்க உய்ய நயந்தருள—வல்லதிரு
வள்ளுவர்தாட் கிக்கோவை வைத்துய்வேன் கையுறையாத்
தெள்ளியஉள் ளன்பு செறிந்து.

# உள்ளுறையின் பொருட்குறிப்பு


| பொருள் | கவி எண் | பொருள் | கவி எண் |
|---|---|---|---|
| அகத்தியரெனல் | 73 | காஞ்சி வேற்காடு | 19 |
| அங்குசமும் கைம்மாவும் | 40 | காந்தியடிகள் எனல் | 76 |
| அதிகாரி, கண்மூடித்தனம் | 80 | காயத்திரி, பஞ்சாக்ஷ | 15 |
| அநசூயை யெனல் | 90 | காவியமும், இலக்கணமும் | 49 |
| அபயமும் புறபுதமும் | 94 | காவியமும் நாடகமும் | 39 |
| அரி அரன் அயனிடம் | 11 | குமரிக்கோடும் கடலும் | 32 |
| அரிவர், சிலப்பதிகாரம் | 45 | கூடல், பொற்றாமரை | 59 |
| அருபமும் அலரும் | 50 | கூவிளம், கருவிளம் | 110 |
| அக்ஷதை பூர்ண கும்பம் | 118 | கொங்கும் கோவையும் | 3 |
| ஆட்டமும் தாளமும் | 65 | கோபாலனை எனல் | 85 |
| இமயமும் கங்கையும் | 38 | கோபுரம் காட்டிமனையும் | 101 |
| இமையோர், சொர்க்கம் | 88 | கோபுரமும் திட்டியும் | 90 |
| இராமபிரானை எனல் | 121 | கோவிலும் சிகரமும் | 27 |
| இலக்கியம், இலக்கணம் | 107 | சமனும் வாரண்டும் | 15 |
| இலக்குமி யெனல் | 1 | சாமந்தர் எனல் | 77 |
| இளநீர், கண்திறத்தல் | 113 | சரசுவதி யெனல் | 2 |
| உற்றவரும் அயலாரும் | 37 | சாமிமலையும் வேலும் | 131 |
| எமனும் மார்க்கண்டனும் | 27 | சாரமும் சக்கையும் | 33 |
| எழுமலை, அலர்மேல் மங்கை | 56 | சாலியனை எனல் | 84 |
| கடக குஞ்சரம் கடகமும் சரம் | 13 | சாவித்திரி எனல் | 128 |
| கடுவும் அமுதமும் | 54, 99, 123 | சிவபிரானை எனல் | 66 |
| கடுவாயும் ஆனும் | 57 | சீசைலம், நீலகண்ட | 102 |
| கண்ணனை எனல் | 81 | சீதை யெனல் | 87 |
| காமனை எனல் | 133 | சுவணக்கலை, மயறு | 62 |
| கயிலையும் வைகுந்தமும் | 36 | செங்கோடும் வேலும் | 34 |
| கலசமும் கட்கடையும் | 23 | செங்கோல், பொன் | 20 |
| கற்கண்டும் சர்க்கரையும் | 104 | செப்பிடு, கண்கட்டு | 93 |

| பொருள் | கவி எண் | பொருள் | கவி எண் |
|---|---|---|---|
| செவ்வேள் எனல் | 31, 75, 98 | பிரமன் எனல் | 103 |
| சேது, கந்தமாதனமலை | 8 | புலவரும சனமானமும | 115 |
| சேலை கட்டும இங்கிதம | 30 | பூர்ணகும்பம, தாமரை | 22 |
| தங்கச் சிமிழும புழுகும் | 114 | பொனமலை, சீரங்கம் | 41 |
| தங்கை தமக்கை | 82 | பொன்முடி, குடியரசு | 105 |
| தண்ணளி கஞ்சத்தனம் | 16 | பொன்னனையாள எனல் | 78 |
| தனதானம கோதானம | 72 | போகியும யோகியும | 6 |
| தனமும அரசாட்சியும | 119 | மகுடந்துறத்தல் காலகதி | 47 |
| தனமும கொடைமடமும் | 109 | மணிமேகலை, சிலப்பதிகாரம் | 95, 121 |
| தனமும் சத்திரமும | 122 | மணிவாசகர் எனல் | 116 |
| திணை மயங்கல் | 97 | மலயம், வைகை, கூடல் | 92 |
| திருக்குறள், நீதி கைத்தல் | 58 | மலையாளமும சேரமானும | 26 |
| திருமால் எனல் | 106 | மாவும வடுவும் | 9, 86 |
| திருவளளுவா எனல் | 5 | மாவும் தேனும | 18, 53 |
| நாகமும் விடமும் | 7 | மீனாக்ஷியும, சொக்கலிங்கமும | 34 |
| நிலமும பத்திரமும் | 61 | மீனும வலையும் | 48 |
| பண்டித நேரு எனல் | 93 | ராம காவியம், லக்ஷ்மணர் | 83 |
| பரங்கிரியும ஆலவாயும | 129 | வாசுகி யெனல் | 29 |
| பந்தும் கட்டையும் | 63 | விஞ்சுவரும அஞ்சுவரும் | 130 |
| பாரியும் வள்ளண்மையும | 42 | விநாயகா எனல் | 28 |
| பாற்குடமும் தயிர்க் குடமும | 44 | வேங்கடமும் காளத்தியும் | 67 |


---

## பிழைத் திருத்தம்

| கவி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 2 | மயிலை | மாலை |
| 42 | 2 | நிலைய | நேய |

# திருவள்ளுவர் ஒரு துறைக்கோவை

## காப்பு : மயிலை விநாயகர் துதி

(i) ஒருதுறைக் கோவைநூல் ஓங்குபுகழ் நீதி
வருதுறைக்கோ வள்ளுவர் வாழ்த்தாக்— கருதுறைக்கே
மும்மதநால் வாயைங்கை மூள்மயிலைக் கற்பகத்தின்
செம்மலர்த்தாள் புன்றலைக்குச் சேர்வு.

[கோவாகும் வள்ளுவர். நால்வாய் - தொங்கும் வாய்]

## ஆசிரிய வணக்கம் : மகாமகோபாத்யாயர் துதி

(ii) ஓரா சிரிய ரிலரிவர் நீதிக்கிங் கொப்பெனப்பார்
கூரா சிரிவள் ளுவர்மே லொருதுறைக கோவைசொல
ஊரே சிரிதமி யேன்சங்க நூற்பதிப் போங்குபெரும்
பேரா சிரியராம் சாமிநா தையர்தாள் பேணுவனே.

[கூர் ஆசு இரி - மிக்க குற்றத்தை ஓடச்செய்யும்]

## அவை யடக்கம்

(iii) நல்ல அமுதிருக்க நஞ்சுண்டான் பூக்குமணம்
இல்லை யெனினும் எருக்குவந்தான் — சொல்லியஇம்
மாதேவன் போன்று மகிதலத்திப் புன்னூல்கைப்
போதேற்பர் மாப்புலவர் போந்து.

[கைபோது - கையாம தாமரையில்]

## நூல்

ஆதி பகவன் எனக் கடவுள் வாழ்த் தணிந்துரைத்து
மாதிர மேத்துசீர் வள்ளுவர் வாழும் மயிலையனாய்!
தீதறு பொற்பிற் றனம்காட் டினை; அங்கண் செங்கமலப்
போதுற வந்தனை; பூமக ளென்றுனைப் போற்றுவனே. 1

துறைப் பொருள்: தனம - அவ்வுறுப்பு; அங்கண் - அழகிய கண்; செங்கமலப்போது - அதுபோன்ற கை. சிலேடைப் பொருள்:—செல்வம் (தனம) காட்டித் தாமரை மேல் அங்கு (அங்கண்) வருதலால் நீ பூமகளாயினை.

சிறப்பொடு பூசனை செல்லா தெனவான் சிறப்புரைக்கும்
அறப்பெருஞ் சீர்த்திரு வள்ளுவர் வாவியுள் அன்னமனாய்!
மறிப்பற ஓங்கலை முன்னீ தெரித்தலின் மாண்பினிதழ்
திறப்புறு பங்கயம் சேர்கையின் வாணியாச் சிந்திப்பனே. 2

துறை:— ஓங்கல் - மலை (தனம); பங்கயம - அது போன்ற கண், சேர்கை - சேரும் கை. சிலேடை:— ஓம் முதற்கலைகாட்டித் தாமரை சேர்தலால் நீ கலைமகள் ஆயினை.

நீத்தார் பெருமை நிறைமொழி கூறி நிலவவைத்திம்
மாத்தா ரணிபுகழ் வள்ளுவர் நாட்டு வரையணங்கே!
ஏத்தேறு கொங்கை யிடங் காட்டிக் கைத்தலத் தெனமுனெழில்
பூத்தாருங் கோவை மறைத்தனை; என்ன புதுமையிதே! 3

துறை:— கொங்கை - தனம, கோ - கண். சிலேடை:— கொங்கு நாட்டைக்காட்டித் தலைநகராய்ச் சிறந்த கோயமுத்தூரை (கோவை) மறைத்தது.

அறத்தினூங் காக்கமு மில்லை எனநல் அறத்தின்வலி
உறுத்தநல் உரைவள் ளுவர்குறட் பாவிரி உண்மையனாய்!
புறத்தே கனக வரைவிட்டு விட்டுப் புகல்கரிய
நிறத்த விழிவரை நீகையிற் கொண்டது நீதியன்றே. 4

**துறை:—** வரை - மலை (தனம்), விழிவரை - வரை விழி, ரேகையுடைய கண். **சிலேடை:—** தங்கயானவரை நீக்கிவிட்டு இழிந்தவரைக் கொண்டது. இழிவர் எனப் பிரிக்க.

இத்தரைக் கண்மூவர்க் குந்துணை யாகஇல் வாழ்க்கை இயல்
சித்திரிக் குந்திரு வள்ளுவர் மயிலைச் செழுமையனாய் !
மெத்தத் தனமலை விட்டனை; ஈகையும் மேவவைத்தாய் ;
சித்தத் துணைத்திரு வள்ளுவ ராகச் சிறப்பிப்பனே. 5

**துறை:—** தனமலை - தலைமாம மலை; ஈ - வண்டு (கண்). **சிலேடை:—** மலையெனச் செல்வம் காட்டி, ஈகையும் இருத்தலால், நீ சிறந்த வள்ளல் ஆயினை. திருவள்ளுவராக - தொனி.

மிக்கசீர் வாழ்க்கைத் துணைநலம் மங்கலம் மேவுமென
வைக்குந் திருவள் ளுவர்வாழ் மயிலை மயிலனையாய் !
தொக்க மணிவரை தோற்றிநற் போகியாம் சூழ்நிலையில்
அக்க மணிகைசார்ந் தியோகியும் ஆன ததிசயமே. 6

**துறை:—** வரை - மலை (தனம்); அக்கம - கண்; அணி கை - அழகிய கை. **சிலேடை:—** மலையென மணி (ரத்தினம்) காட்டிப் போகியும், அக்கமணி (ருத்ராக்ஷம்) சார்ந்து யோகியும ஆயினை.

ஆற்ற அமிழ்தி னினிதுகூ றாமென் றரியமக்கட்
பேற்றி னலந்தெரி வள்ளுவர் வாழ்வரைப் பெண்மயிலே !
தோற்ற முறஎதிர் நாகத்தை விட்டுத் துணையுறுகை
ஏற்று விடத்தை மறித்தனை; இச்செயல் ஏற்புடைத்தே. 7

**துறை:—** நாகம் - யானை (அதுபோன்ற தனம்); விடம் அதுபோலுங் கண். **சிலேடை:—** நாகப்பாமபை எதிரில் விட்டு விஷத்தை மறித்தது. மக்கட்பேறு என்னும் இவ் வதிகாரம **புதல்வரைப் பெறுதல்** எனவும் பேருறும்.

அன்பின் வழிய துயிர்நிலை என்னவே அன்புடைமை
நன்பிற் றெரிதிரு வள்ளுவர் நாட்டின் நகரனையாய்!
முன்வந் திருகடல் கையால் மறைத்தனை; மூண்டணைசேர்
பின்கந்த மாதனம் காட்டலென் னுமிது பேதைமையே. 8

துறை:— கடல் - அதுபோனற கண்; அணை தனம் - சேரும தனம. சிலேடை: மகோததி, ரத்நாகரம எனும கடல்களை மறைதது, சேதுவை (அணை) யடுத்த கந்தமாதன மலை காட்டல்.

படியினில் வந்தவிருந்தும் அனிச்சமும் பண்பிலொன்றும்
படிவிருந் தோமபல் பகர்திரு வள்ளுவர் பாவனையாய்!
வடுவைக நாந்துகைம மாக கொமபு காட்டும வகையறிந்தேன்;
நடுநிலை நின்னிடம் கண்டிலேன் நாரியர் நாயகமே! 9

துறை:— வடு - மா வடு (கண); கைமமா - யானை; கொமபு - தந்தம (தனம). சிலேடை:— மா மரத்தில் வடுவை மறைத்துக் கொமபை மட்டும காட்டல். நடுநிலை-நியாயம; இடை - தொனிப் பொருள. கருத்தொறறுமை 86.

இனியவை கூறல் கனியாம் இறைதகாய் என்றுமனம்
கனிய வுரைதிரு வள்ளுவர் பாடற் கவினனையாய்!
முனமச் சலந்தத்தும் அத்தியை அத்தத்து மூடியநீ
நனியெதிர் குத்துமிவ் அத்தியை நாட்டுதல் நன்றுநன்றே. 10

துறை.— சலம - நீர்; அத்தி - கடல் (கண்); அத்தி - யானை (தனம). சிலேடை:— அவ் அத்தியை மூடி, இவ் அத்தியை நாட்டல். நனறு நனறு - இகழச்சி.

நன்றி யறிதலுள் நன்றி மறப்பது நன்றன்று; நன்(று)
அன்றை மறக்கஅன் றேயெனும் வள்ளுவர் ஆழமனை!
இன்று மொழிக அரிஅரன் எய்திடம் எய்தவைத்தே
மன்ற அயன்தங் கிடங்கை மறித்த மதியினையே. 11

துறை:— அரி அரன் இடம் - ஆலிலை, கைலை (வயிறு, தனம்), அயனிடம் - தாமரை (கண்). சிலேடை :— அரி அரனிடம் காட்டி, அயனிடத்தை மறைத்தது.

சமன்செயுங் கோலா நடுவு நிலைமை தகவுரைக்கும்
தமனிய வாக்கார் திருவள்ளுவர் தமிழ்ச் சாயலனாய்!
சமனை உதைத்துத் தகைந்தவர் வாழ்வரை தான்தெரித்தே
நமனை மறைத்தலென் நல்வினை யென்று நவிலுவனே. 12

தமனியம் - பொன். துறை - தகைந்தவர் (சிவபிரான்) வாழ் வரை - கைலை (தனம்), நமன் (கண்). சிலேடை :— யமனை உதைத் தவா மலைகாட்டி அவனை மறைத்தது.

அடக்க முடைமை அமரருள் உய்க்கும் அறிமினெனப்
படிக்கண் பகர்திரு வள்ளுவர் வாழ்நற் பதியனையாய்!
கடக்குஞ் சரத்தைக் கரத்தே மறைத்துமென் கண்ணெதிரே
கடக்குஞ் சுரத்தைநீ காட்டினை யம்ம! கருணையிதே. 13

படி - பூமி. துறை:- சரம - அம்பு(கண்), குஞ்சரம் - யானை (தனம). சிலேடை :— குஞ்சரத்தை ஒருகால் மறைத்து ஒருகால் காட்டல்.

ஒழுக்க முடைமை விழுப்பம் தருமெனும் உண்மைமிக
அழுத்தத் துரைவள் ளுவர்வாழ் மயிலை அணங்கனையாய்!
விழுக்கைம் மலையும் மலையும் மலையாமுன் விடடெதிரே
இழுக்கிற் றிருக்கை திருக்கை மறைத்தல் இயல்பிலையே. 14

துறை :— கைம்மலை (யானை) மலைபோன்ற தனத்தை; திருக்கை - கண்ணை. சிலேடை :— யானையும மலையும எதிர்க்க விட்டு அந்தத் திருக்கை (கோணலை) மறைத்தல். விழு - சிறப்பு.

பிறனில் விழைவான அறன்கடை யாாக்கெலாம பேதையெனுப
பிறனில் விழையாமை பேசுசீர் வள்ளுவா பேறனையாய் !
திறனுறு காயத் திரிமுன் தெரித்தஇச் சீரிருக்க
மறனுற என்னெதிர் அஞ்சக்கரங்கை மறித்தலென்னே? 15

துறை :— அருதிரி - மலை (தனம), சக்கர் - கண்கள் (சக்கு - கண்). சிலேடை :— காயத்திரியைக காட்டிப பஞ்சாக்ஷரத்தை மறித்தது ஏன் ?

பொறையுடை மைக்ககழ் வாரைப் பொறுக்கும் புவியுவமை
நிறைவுரை வள்ளுவர் வாழ்பயிலைப்பதி நேரணங்கே!
கறையுற அஞ்சனக் கண்ணிகழ் தண்ணளி கைம்மறித்தே
மறைவறக கஞ்சத் தனங்காட்டலென்ன மகிமையிதே? 16

துறை :— கண்ணும அளியை (வண்டை); கஞ்சத்தனம - தாமரைபோலுந் தனம சிலேடை ;— தண்ணளியை (அன்பை) மறைத்துக் கஞசத் தனம (உலோபம) காட்டல்.

பாவி அழுக்கா றென அழுக் காருமைப் பண்புதெரி
தீவிய வாக்கிற் றிருவள் ளுவரூர்த் திருவனையாய் !
தாவிய லங்கண் சமன்கை மறைத்தே தகாமுறையில்
மாவியல் வாரண் டிருவரை யுய்த்தல் வழக்கிலின்றே. 17

துறை :— ஏ - அம்பு அமபும யமனுமாங் கண்ணே; வார் - கச்சு. அண்டு இருவர் - அண்டிய இருதனங்கள். சிலேடை :— வழக்கில் சமன் (Summons) மறைத்து வாரண்டு அனுப்பல்.

செல்வ முளதஃ கா தென்றுவெஃ காமைத் திறம்பகர்ந்த
செல்வப் புலவர் திருவள் ளுவர்வரைத் தெய்வமனாய் !
கல்வரை மாவைமுன காட்டினை; தேனையுங் கைவிடுத்தால்
நல்வகை யாலவ் விரண்டுங் கலந்து நலந்துய்ப்பனே. 18

துறை :— வரை - மலை (தனம்), மா - யானை (தனம்), தேனை - வண்டை (கணணை). சிலேடை:— கல்லில் அறைந்த மாவுடன் தேனையும விடல் நலம.

புறங்கூரு மைக்கண் பிறர்குறை போற்றம் புரைஎனுமா(று)
அறங்கூறும் வள்ளுவர் வாழு மயிலை அணங்கனையாய்!
புறம்பே தெரியக் காஞ்சிகச் சூர்வரை போக்கினை;கை
திறபபாது காளததி வேறகாடு சோத்த செயலிதென்னே? 19

துறை :— காஞ்சி - மேகலை, கச்சு (வார்; ஊர் வரை (ஊரும் தனம), காள அத்தி - விஷககடல் (கண்), வேறகாடு - வேலின் மிகுதி (கண்). சிலேடை :—காஞ்சியும கச்சூரும தெரியக் காளத்தியும் வேறகாடும மறைத்தல்.

பயனில சொல்லாமை அன்ன பகர்வான் பதடியென
நயனில கச்சொல் திருவள் ளுவர்வள நாடனையாய்!
இயனனி காட்டுசெங் கோலைக கரத்தி னிடைமறித்தென்
வயினுறப் பொன்முடி மட்டுந் தரிலென்ன மாட்சியிதே?20

துறை :— கோலை - அமபை (கண்ணை), பொன்முடி - அது போனற தனம. சிலேடை :— செஙகோலை மறித்து முடிமட்டும் தருதல் மாட்சியிலலை.

தீவினை யச்சத் தவைமிக அஞ்சுக தீயினென
ஓவலில் சீருரை வள்ளுவர் நாட்டுயிர் ஓவியமே!
ஏவலிற் சேர இணங்குமென் முன்னுவந் தேவுகையில்
மேவினை என்னினும் வல்லை வெறிதேன் விடுத்தனையே? 21

துறை :— ஏவு- அம்பை (கண்ணை), வல்லை-சூது கருவியை (தனததை). சிலேடை :— ஏவல் செய்ய விழையுமெனனைச் சேர்த்தும் உடனே (வல்லை) ஏன் வறிது விடுத்தாய்?

ஊருணி நீர்நிறைந் தற்றே எனஒப் புரவறிதல்
சீரண வத்தெரி வள்ளுவர் சேணகர்ச் சீர்த்தியனாய் !
பூரண கும்பநன் மங்கலம் வைத்தெதிர் போந்தருள்நீ
தாரணி தாமரை கைமறைத் தாயிது ; தக்கதின்றே. 22

துறை :— கும்பம் - குடம் (தனம்); தாமரை - அதுபோலுங் கண்ணே. சிலேடை :— மங்கலப் பொருள்களில் பூரணகும்பம் வைத்துத் தாமரையை மறைத்தல்

"இல்லெனு மெவ்வக்" குறளிற் பலபட நகையினும்
நலனுரை வள்ளுவர் வாழ்மயி லாபுரி நாயகமே !
கலசமும் பொற்குவை யுந்தந்து கட்கடை கைம்மறித்தால்
சலசமினளே ! மது வுண்டெங்ஙன காமந் தழைப்பதுவே ? 23

துறை :— கலசம் பொற்குவை - இவைபோலுந் தனம், கட்கடை - கடைக்கண். சிலேடை — கலயமும் முடிப்புந் தந்து, கள்ளுக்கடையை மறித்தால் எப்படி மதுவுண்டு இன்புறுதல் ? சலசமின - இலக்குமி, விளி. சலசம் - தாமரை.

தோன்றிற் புகழொடு தோன்றுகென் றேபுகழ் சொல்புலவர்
தோன்றல் திருவள் ளுவர்வாழ் மயிலைப்பூஞ் சோலையனாய் !
வான்றரு மாதிருச் செங்கோ டெனக்குமுன் வைத்திடுநீ
ஏனம்ம ! என்கொலோ சேலங்கைக் கொண்ட இயலிதுவே? 24

துறை :— கோடு - மலையுச்சி (தனம்); சேல் - மீன் (கண்). சிலேடை :— திருச்செங்கோட்டை நமக்கு காட்டி, சேலத்தைக் கொண்டது ஏன ?

அருட்செல்வம் செல்வத்துட் செல்வமென் றூர அருளுடைமைப்
பொருட்செறி வோதும் திருவள் ளுவர்க்காப் பொன்னனையாய் !
அருட்டுறை கோவில் அடைத்துச் சிகரமுன் னுக்குவையேல்
மருட்டெற வந்து வழிபாடு செய்யும் வழியெதுவோ ? 25

துறை:— கோஇல் - கண்ணாகிய இடம், சிகரம் - அதுபோலுந் தனம். சிலேடை :— கோவிலை மறைத்துக் கோபுரம் காட்டில் எங்ஙனம் வழிபடுவது? மருட்டெற - விரித்தல். தெற - அழிய.

எல்லா வுலகுந் தொழுமாற் புலாலை இகப்பினெனப்
பொல்லாப் புலால்மறுத் தல்புகல் வள்ளுவர் பொற்பனையாய்!
எல்லார் சிறப்பின் மலையாளம் காட்டினை; என்னெதிரே
நல்லார் புகழ்சேர மானைநீ கைக்கொளல் நாயமின்றே.

எல் - ஒளி. துறை :— மலை - தனம, ஆள அம - காட்டும் அழகு; மானை - கண்ணை. சிலேடை :— மலையாள நாட்டைக் காட்டிச் சேரமான் பெருமாள நாயனாரைக் கைக்கொண்டது.

வேண்டிய வேண்டியாங்கெய்துந் தவத்தென விண்டுதவத்(து)
ஈண்டிய சீருரை வள்ளுவர் பாவின் இசையனையாய்!
தாண்டியல் சாரும் தருக்கார் சமனைத் தடுத்தனைநீ
மாண்டகு மார்க்கண்ட னாகலிற கண்ணுதல் மானுவையே. 27

துறை :— சமன - யமன் (கண்); மார்க்கண்டன் - தனத்துக்கு அண்டையன. சிலேடை :— யமனைத் தடுதது என்னை மார்க் கண்டனாககலினால் நீ சிவபிரானை ஒத்தனை.

கூடா ஒழுக்கர் புதன்மறை வேடுபுட் கோடலெனப்
பாடார் மறைசொல் திருவள் ளுவர்குறட் பாவனையாய்!
வாடா மதமிகு கும்பமுன் வைத்து மயக்கியங்கண்
நீடார் துதிக்கையும் நீட்டி விநாயகன் நேர்ந்தனையே. 28

புதல் - புதர்; வேடு - வேடன; பாடு - பெருமை. துறை:— கும்பம - குடம் (தனம); துதிக்கை - துதிபெறுமகை; சிலேடை :— மதக்கும்பத்தையும நீண்ட தும்பிக்கையையும காட்டலால் நீ விநாயகன ஆயினை.

உள்ளத்தா லுள்ளலும் தீதாக்கள் ளாமை உயர்வுலகு
கொள்ளப்பா ரட்டும் குலவள் ளுவர்பொழிற் கோகிலமே!
தள்ளருங் கற்பாந் தனங்காட்டி வள்ளுவர்ச் சார்கையிற்சீர்
விள்ளரும் வாசுகி நீ;வா சுகியென வேண்டுவனே. 29

துறை :— கல்பாம தனம - மலைபோற் பரந்த ஸ்தனம்; வள் உவர் - கடல் (அதுபோன்ற கண்); சார்கை - சாரும கை. சிலேடை :— கறபுத்தனமையை விளக்கித திருவள்ளுவரைச் சாருதலால் நீ வாசுகி; வா சுகி என வேண்டுகிறேன.

தன்னெஞ் சறிவதுபொய்யற்க வாய்மைத் தகவிதென
நன்னர்த் தெரிதிரு வள்ளுவர் தொண்டைநன் னுடையாய்;
முன்னிங் கெதிரினுன் மூடத் தகுநன் முகைதெரிய
என்னின் கரங்கொடு சேலைநீ கட்டிய இங்கிதமே? 30

துறை :— முகை-மொட்டு (தனம); சேலை-மீனை (கண்ணை). சிலேடை :— தனைநதெரியச் சேலை கட்டியதின குறிபபு என்ன?

செல்லிடங் காக்க சினமல் லிடத்தென் செயினுமொன்றுச்
சொல்லி வெகுளாமை சுட்டிய் வள்ளுவர் தூய்மையளுய் !
எல்லியற் கைஅயில் ஏற்றனை ; அவ்வா றியைவளஞ்சார்
நல்லியற் குன்றமும் நாடிற்செவ் வேளென நாடுவனே. 31

துறை :— எல் - ஒளி; அயில் - வேலை (கண்ணை); குன்றம் - தனம். சிலேடை :— வேலைக் கையிற கொண்டாய்; அதுபோற் குன்றமும போற்றிற் குமரவேள ஆகுவை.

இன்னுர்க்குத் தண்டம் இவர்நாண நன்னயம் எய்துவித்தல்
இன்னுசெய் யாமையிற் சொல்வள் ளுவர்குறள் ஏற்றமனுய் !
முன்னே குமரிநற் கோடு முடுக்கிய மொய்ம்புளநீ
என்னே இருகடல் சார்கை மறித்த தியம்புகவே. 32

துறை :— கோடு - மலைச்சிகரம் (தனம்); கடல் - கண். சிலேடை :— குமரிமுனை காட்டிய நீ, மேல் கடல் கீழ்கடல் சேரு தலை மறித்ததென் ? குமரி - இளமங்கை (தொனி).

முன்சார நல்லது கொல்லாமை யென்று முனமுரைத்துப்
பின்சாரப் பொய்யாமை பேசிய வள்ளுவர் பெட்பனையாய்!
நன்சார மிக்க வரையெதிர் விட்டனை; நாடுமென்முன்
என்சார நீகையிற் சக்கையே ஏற்றுள இச்செயலே? 33

துறை :— வரை - தனத்தை; சக்கை - கண்ணை. சிலேடை :— சாரம் மிக்கவரை விட்டு, சக்கையை ஏன் கொண்டாய் ?

நிலையாம் உலகெனும் புல்லறிவாண்மை நிலைகடையா
நிலையாமை கூறும் திருவள் ளுவர்குறள் நீதியனாய்!
தலையால வாய்திகழ் மீனாட்சி யைகனை தகைந்திடுநீ
கலையாய தீர்சொக்க லிங்கமுன காட்டுமிக் காட்சியென்னே! 34

துறை :— ஆலம வாய - விஷமுள்ள இடம, மீனாட்சி - கண்ணின பிறமுகசி, சொக்கலிஙகம - தஙகலிஙகம, அது போலும தனம்; கலை - ஆடை, சிலேடை :— ஆலவாயில் மீனாட்சியைத் தடுத்துச் சொககலிஙகததைக காட்டலென ?

துறவினை யாதனின் நீங்கினு னங்கதாற் றன்பிலனென்(று)
உறவிரி வள்ளுவர் ஊர்வாழ் உயிருறும் ஓவியமே!
புறமுற என்முன் சிலைகாட்டிப் போந்து பொதிந்திருகை
திறமுடனமபை மறைப்பினென் செய்து செயங கொளவதே ? 35

துறை :— சிலை - மலை (தனம்); அமபை - அதுபோனற கண்ணை. சிலேடை :— சிலை - வில். எதிரே வில்லைப் பிடித்து நின் றும் அம்பை மறைத்தால் ஜெயிப்பது எப்படி ?

செயிருறு பேதைமை நீங்கிச் சிறப்பெனும் செம்பொருளே
பயிலுதல் மெய்யுணர் நல்பகர் வள்ளுவர் பாவனையாய் !
கயிலை யெனக்கெதிர் காட்டினை ; சைவக் கருத்தினிலோ
மயிலை யனுபுடன் வைகுந்தம்·கையால் மறைத்தனையே. 36

துறை :— கயிலை - கைலை (தனம்), வை - கூரிய, குந்தம - வேல் (கண்). சிலேடை :— கைலை காட்டிய நீ வைகுந்தம் மறைத்தது சைவக் கருத்திலா ?

தவாஅப் பிறப்பீனும் வித்தென் றவாவுடைத் தன்மையினை
அவாவறுத் தற்கண் அறைவள் ளுவர்நாட் டணியனையாய் !
உவாமதி போன்முக மண்டலத் தோடிவ ணுற்றவரை
இவாறு விடுத்தே கயலாரைக் கைக்கொண்ட எண்ணமென்னே? 37

தவா - நீங்காத. துறை :— வரை - தனம், கயலார் - கண்கள். சிலேடை :— உற்றவரை விடுத்து அயலாரைக் கைக்கொண்டதேன் ? ஏகு + அயலார் என்க.

ஊழிற் பெருவலி யா ?யா வுளமுந் துறுமிதென
ஊழின் றிறமிங் குரைவள் ளுவர்புகழ் ஊக்கமனாய் !
தாழ்வில் இமயத் தடவரை காட்டித் தகவுறுநல்
ஆழி திருக்கங்கை நீமறித் தாலஃ தழகிலையே. 38

துறை :— வரை - தனம, திருக்கு - கண். சிலேடை :— இமய மலையைக் காட்டிக் கங்கையை மறைத்தது அழகில்லை.

இறைமாட்சியின் முறை செய்துயிர் காக்கும் இறையுயிர்கட்(கு)
இறையாவ னென்றுரை வள்ளுவர் வாழ்நகர் ஏமமனாய் !
பொறைநேர் தெரித்தனை; வாளயில் கைக்கொளும் புந்தியினால்
நிறைவாம் கொடுமை நிகழ்த்தினை; என்ன நியாயமிதே? 39

துறை :— பொறை - மலை (தனம்), வாள் அயில் - இவை போற் கண்கள். சிலேடை :— நேரிற் பொறுமை(பொறை) காட்டிய நீ வாள் வேல்களைக் கையிற்கொண்டு கொடுமை செய்தனை.

பார்மீது கற்றவர் கண்ணுளார் ; புண்ணுளார் பார்பிறராச்
சீராருங் கல்விச் சிறப்புரை வள்ளுவர் தேசனையாய் !
நேரா வருமங் குசத்தை முன்காட்டி நிலைதவறிப்
பேரா வணமுன்கை மாமடக் கிட்டனை பெட்புறவே. 40

துறை :— குசத்தை - தனத்தை, கை மா - கையால் வண்டை (கண்ணை). சிலேடை:— அங்குசத்தைக் காட்டிக் கைமமா (யானை) அடக்கினை.

ஊரெங்குங் கல்லார் விலங்கெனக் கல்லாமைக் குற்றகுறை
நேரிங் குரைத்த திருவள் ளுவர்புகழ் நீட்சியனாய் !
ஓரங்க மாம்பொன் மலைஒளி வீசிமுன் ஓங்கவிட்டே
சீரங்க மாங்கண் செறித்தாய் கரங்கொடென் செய்துயிதே ? 41

துறை:— பொன்மலை - அதுபோன்ற தனம்; சீர் அங்கம் ஆம் கண் - சிறந்த உறுப்பாம் கண்ணை. சிலேடை :— பொனமலை ஊரைக் காட்டி அஙகே ஸ்ரீரஙகத் தலத்தை மறைத்தனை ?

தேரிற் செவிச்செல்வம் செல்வத்து ளேதலைச் செல்வமென
நேரிதாக் கேள்வி நிலைசொலும் வள்ளுவர் நிலையமனாய் !
பாரிநீ யாமாறு கண்முன் பருந்தனம் பாலித்தனை ;
வாரியீ கைம்மறித் தால்மிக மாசுறும் வள்ளன்மையே? 42

துறை :— பாரி - மனைவி, தனம - அவ்வுறுப்பு, ஈ - வண்டு (கண்). சிலேடை :— பாரிவள்ளலைபபோற செல்வம படைத்தும், ஈகையைத் தடுத்தல் வள்ளன்மைக்கு மாசாகும.

**ஏப் பொருள் ஏற்பின் அறிவுடை மையதற் கேற்றபெற்றி**
மெய்ப்பொருள் காண்ப தெனுமவள் ளுவர்வரை மேவணங்கே !
செப்பிடு வித்தையென் முன்நீ தெரித்தனை; தேர்ந்து நலம்
செப்பிடு கண்கட்டு வித்தையும் செய்தனை; சித்திரமே. 43

துறை:— செபபு - அதுபோலுந் தனம்; செப்பிடு - சொல்லப்படும், கண் கட்டு வித்தை - வெளிபபடை. சிலேடை:— நீ செப்பிடு வித்தையுடன் கண் கட்டு வித்தையும காட்டுகிருய்.

முாண்டரு தன் குற்ற நீக்கிப பிறசொலல் மொய்ம்பிலதென்(று)
அரண்டரக் குற்றங் கடிதல்சொல் வள்ளுவர் ஆட்சியனுய் !
திரண்டெழு பாற்குடம் சேரமுன் ஏந்தும் செயலிருக்க
இரண்டுததிக்குடம் ஏன்கைம்மறித் தா யியம்பெனக்கே. 44

துறை:— பாற்குடம - தனம, உததி - கடல் (கண்).

சிலேடை:— ஏழு பாற்குடம ஏந்தும் நீ, இரண்டு தயிர்க் குடம மறிததலென ?

வருபெரி யாரைத் துணைக்கோட லேதலை வன்மையெனத்
தெரிதிரு வள்ளுவர் சேர்மயி லைப்பதிச் சேயிழையே !
அரிவரி யேகைப் பிடித்தனை; அன்பால் அடுத்த எனக்(கு)
அரிய சிலப்பதி காரந் தெரித்தல் அதிசயமே. 45

துறை:— அரிவரி - வரி அரி - வரிவண்டு (கண்), சிலம்பு - மலை (தனம), அதிகாரம - பெருமை. சிலேடை:— அரிச்சுவடி கையில் எடுத்த நீ சிலப்பதிகாரம பாடம் சொல்லல் எபபடி?

பற்று நிலத்தியல் நீர்திரிந் தாங்குப் படருமெனச்
சிற்றினம் சேராமை செப்பிய வள்ளுவர் செப்பனையாய் !
மற்றிவண் வந்து வனச முகைமுன் வறிதுவிடுத்(து)
எற்றுக் கிரண்டு தளமேகை யேற்ற தியம்புகவே. 46

**துறை :—** தாமரைமுகை - தனம். தளம் - இதழ் (கண்).

**சிலேடை :—** மொட்டை விட்டு, இதழைக்கொண்டதேன் ?

எண்ணித் துணிக தெரிந்து செயல்வகை யீதெனச்சீர்
நண்ணத் தெரிதிரு வள்ளுவர் நாட்டிய நாடனையாய்!
கண்முன் மகுடந் துறந்தனை; கால கதியறிந்தே
நண்ணுங் குவலயம் நாடிக் கையேற்றனை; நற்றகவே. 47

**துறை :—** மகுடம் - தனம், குவலயம் - நீலமலர் (கண்).

**சிலேடை:—** மகுடத்தை நீக்கிக் குவலயத்தை (பூமியை) ஏற்றாய் இக்காலகதியை அறிந்தே.

வலியறி தற்கண் வினைவலி மாற்றான் வலிதுணைதன்
வலியறி கென்றுரை வள்ளுவர் வாழ்வரை மாமயிலே!
அலைதரு மீனைக் கரமறைத் தாங்கண் அணிபெறவே
வலைதர லென்ன மதியுடைத் தென்று வழுத்துகவே. 48

**துறை :—** மீனை (கண்ணை) வலை - வல்லை (சூதுகருவியை - அதுபோலுந் தனத்தை) **சிலேடை :—** மீனை மறைத்து வலையைத் தந்து பயன என்ன ?

ஞாலங் கருதினுங் கைகூடு மென்னும் நயவுரையை
கால மறிதலிற் காட்டிய வள்ளுவர் காட்சியனாய்!
சாலநற் காவியங் கைவரு தன்மை தகவுவதற்(கு)
ஏல வரையின் இலக்கணம் காட்டல் இலக்கணமே. 49

**துறை :—** காவி - நீலமலர்(கண்), அங்கை - உள்ளங்கை, வரை - தனம். **சிலேடை :—** காவியம் கைதேர்ந்ததுபோல வரையறுத்த இனிய இலக்கணமும் காட்டல் அழகிதே.

இரும்புனல் வெல்லும் முதலே யென ஆங் கிடனறிதல்
விரும்பு வணங்தெரி வள்ளுவர் வாழ்நகர் மெல்லியலே!
அருமயினைப் போக்கி அலாகையிற் கொண்டனை ; ஆதலினுற்
பெருமபுவ னத்திலார் உன்போலப் பேதையர் பேசுதற்கே? 50

துறை :— அருமபு - தனம, அலர் - இதழ் (கண்).

சிலேடை :— அருமையைப போக்கிவிட்டுப பழிச்சொல்லைக் (அலர்) கொண்டது. அலர் - மலர்ந்த மலருமாம்.

தெரிந்து தெளிதலிற் குற்றங் குணங்களைத் தேர்ந்துமிகை
புரிந்து கொளல் எனும் வளளுவர் போற்று புகழனையாய்!
திரிந்து கடுவாய் தெறுதல் மறைத்தித் தினமென்முனே
பரிந்து நலஞ்செயும் ஆனை விடுத்தது பண்புடைத்தே. 51

துறை :— கடுவாய - விஷமுளள இடம (கண்), ஆனை-யானை (தனம). சிலேடை :— புலியை (கடுவாய) மறைத்துப் பசுவை (ஆன) விடுத்தது.

வினையார் எதனுல் முடிப்பரென் ருய்ந்து மிகத்தெரிந்து
வினையா டலைச்சொல் திருவள் ளுவர்வரை வேட்டமனே!
தனமாரக் காட்டிநீ அங்கயற் கையாற் றகைந்தெனது
மனமாயச் செய்த மதியென் அரைமதி வாணுதலே! 52

துறை :— தனம - அவவுறுபபு; கயல் - மீன (கண்).

சிலேடை :— செல்வம் நிரம்பக் காட்டி அயலே கையாற் றடுத்தது. அரைமதி. மதி - புத்தி சந்திரன்.

சுற்றந் தழாலிற் கரைந்துணுங் காக்கைசீர் சுட்டியதை
முற்றத் தெரிவள் ளுவர்வாழ் மயிலைநன் முத்தனையாய்!
மற்றுன் கரத்திடை மானையும் தேனையும் வைத்திறுக்கி
எற்றுக் கெனக்குமுன் ஆனையும் ஆளியும் இட்டனையே. 53

தழால - தழுவல். துறை :— மான தேன் - வண்டுகள் (கண்கள்), ஆனை - தனம, ஆளி - சிங்கம (இடை). சிலேடை :— மானையும் தேனையும உன கைக்கொண்டு, ஆனையும ஆளியும் என் முன் வைத்தது எதற்கு?

பொச்சாவார்க் கொன்றும் அரிதிலே யென்று புகழுறஅப்
பொச்சாவா மைபுகல் வள்ளுவா பொன்நகர்ப் பொற்பனையாய்!
மைச்சார் கருவெங் கடுவை மறைத்து வள அமுதம்
வைச்சார் நிறைகுடம் முன்காட் டினை அம்ம! மாநயமே. 54

பொச்சாவாமை - மறவாமை. துறை:—மை சார் (அனறி மைத்து ஆக எனினுமாம), கடுவை - விடத்தை (கண்ணை), குடம்-தனம். சிலேடை:—கொடிய விஷத்தை மறைத்து அமுத கலசம் காட்டியது.

குடிதழீஇக் கோலோச்சு மாண்புசால் மன்னன்செங் கோன்மையினில்
அடிதழு வும்பார் எனும்வள் ளுவர்கவி ஆர்வமனாய்!
முடுகுறச் சொர்ண மலைபோற் றனங்காட்டி முந்தஅங்கண்
கடுவத் தனையும் கைம்மறித் தாலென்ன காரியமே? 55

தழீஇ - தழுவி. துறை:— தனம - அவ்வுறுப்பு, கண் கடு - கண்ணாகிய விடம். சிலேடை:—தங்கமலை போலச் செல்வத்தைக் காட்டி, கடுகளவும் தராதுமறித்தல். கடுவு - போலி.

அல்லற்கண் ணீர்செல்வம தேய்க்கும படையென் றழுத்தமுறும்
சொல்லிற கொடுங்கோன்மை சொல்லிய வள்ளுவர் சொல்லனையாய்!
வல்லை எழுமலை யானைமுன் வைத்து வழிபடற்கே
செல்வ அலர்மேலு மங்கை மறைத்த செயலிதென்னே? 56

துறை:—வல்லை - சூதுகருவியை, எழுமலை எழுகின்ற - மலையை, யானை - யானையை; இவைபோன்ற தனத்தை என்க. அலர்மேல்-கண்ணின மேல். சிலேடை:—ஏழுமலையானை விரைவிற் (வல்லை) காட்டி, அலர்மேலு மங்கையை மறைத்தல்.

வெருவந்த செய்யாமை யைக்கடி தோச்சியே மெல்லெறிகென்(று)
ஒருமந் திரமுறை வள்ளுவர் வெண்பா ஒளியனையாய்!
வருமீன் வரிசைக் கிரண்டுமுன் வைத்துநீ மற்றவற்றில்
இருமூன் றினைப்பதின் மூன்றால் மறைத்தனை ; என் கொலிதே? 57

துறை:—மீன வரிசை - நட்சத்திர வரிசை. இரண்டு - பரணி (தனம); இருமூனறு - ஆறு, ஆதிரை திரை - கடல் (கண்), பதின்மூனறு - அத்தம (கை)சிலேடை:—விண்மீனினத்தில் இரண்டைக் காட்டி ஆறைப் பதின்மூன்றால் மறைத்தது.

கண்ணோட்டங் கண்ணுக் கணிகல மாஅதைக் காணவைத்த
பண்ணேறு சீர்வள் ளுவர்மயி லையிற்பூம் பாவையனாய்!
தண்ணார் திருக்குற ளின்கை தழுவத் தமியன்முனே
விண்ணார் மலைவிட்டு நீதிகைத் தாயம்ம! விம்மிதமே. 58

பூம்பாவை - சம்பந்தர் எலும்பைப பெண்ணாக்க வந்தவள்.

துறை—திருக்கு - கணணை, உறழுநின கை-ஒதத உன கையில், மலை - தனம, திகைத்தல் - மயஙகல. சிலேடை;—நீ திருக்குறளைக் கையிற கொண்டும், மலையுடன நீதியை வெறுத்தாய(கைத்தாய).

ஒற்று டலின்றெற்றை ஒற்றினொ லொற்றி உணருநலம்
தெற்றேற உரைத்த திருவள் ளுவர்வரைத் தெய்வமனாய்!
நற்றா ரணிவரை கூடலை நாட்டியிந் நாளிலங்குப்
பொற்றா மரைகை மறைத்தனை; அம்ம! புதுமையிதே. 59

துறை:— வரை - தனமு, கூடலை - கூடுதலை, தாமரை - கண்.
சிலேடை :— மதுரை(கூடல்)யைக் காட்டி, அஙகு பொற்றாமரை (தீர்த்தம்)யை மறைத்தது.

ஆக்கம அதாவினாயச் செலலுமெனற் றாககத தமைபெருமை
ஊக்க முடைமையிற் சொலவள ளுவாநகா் ஒணடொடியே?
தாககும் மதகரி தாங்குணை நிற்கத் தரணிமிசைப்
பூக்கும அலாகையிற் பூணடதென னேமதன போாதொழிறதே? 60

துறை:—மதகரி - மதயானை(தனம்), துணை - இரண்டு; அலர் - இதழ் (கண்). சிலேடை:— போர்த்தொழிற்கு மதயானை துணையாயிருக்கவும், பழிச்சொல்லை (அலர்) ஏன கைக்கொண்டாய்? அலர்-பூவுமாம். அதர் - வழி.

மடியின்மை யின்சீர் மடிமை அடிமை வருக்குமென் றிப்
படியிற் பகர்வள் ளுவர்வாழ் மயிலையிற் பாவையனாய் !
படியி லிருமா நிலங்காண ஈந்தனை; பாத்தியமா
வடிவுறு பத்திரம் நின்கை வருகை வழக்கமின்றே. 61

படி - தன்மை, படி - பூமி. துறை:— இருமா - 2 யானை(தனம்), பத்திரம் - வாள (கண்). சிலேடை:—நிலத்தில் இரண்டுமா(ஓரளவு) ஈந்தனை; அந்தச் சீட்டு (பத்திரம) உன்கை வருதல் வழக்கில்லை.

ஆள்வினை யுன்னி முயற்சி திருவினை ஆக்குமெனும்
கோள்வகுக் கும்வள் ளுவர்மயி லைவரைக் கோகிலமே !
மூளும் சுவணக் கலைவிடுத் தாயென் முனமெதிர்ந்திந்
நாளென் மயலுறு சேலைநீ கட்டிய நாட்டமிதே. 62

துறை:—கலை - கல்லை (மலையை - தனத்தை), சேலை - மீனை (கண்ணை). சிலேடை:—பொனனுடையை விடுத்து எனமுன் ஏன அழுக்குச் சேலையைக் கட்டி வந்தாய்?

இடுக்கண் வருங்கால் நகுகஎன் றின்னுரை ஏற்றமிக
இடுக்கண் அழியாமை யிற்பகர் வள்ளுவர் ஈகையனாய் !
மிடுக்குறப் பந்தை விடுத்துக்கட் டைவர மேவுகையால்
தொடுக்குமிவ் வாட்டம் பயின்றதெங் கென்றுநீ சொல்லுகவே. 63

துறை:—பந்தை - தனத்தை, கண்டைவர - கண்ணைச்சேர. சிலேடை:— பந்தை நீக்கிப் பந்தடிமட்டை (கட்டை) மட்டும் கொண்டு ஆடும ஆட்டம். துறைப்பொருளில் வாட்டம் என்க.

**மதிநுட்ப** நூலோ டுடைத்தே அமைச்செனும் மாண்புரையை
அதிநுட்ப மாச்சொல் திருவள் ளுவர்குறள் ஆக்கமனய் !
மதியினுட் பத்தும் பனிரண்டும் அங்கையில வைததவற்றிற்
பதியும் நடுவட் பதினொன்று கைவிடும பான்மையெனனே ? 64

**துறை:**—மதியில் - மாதத்தில். 10 மகரம(கண்) 12 மீனம(கண்), 11 கும்பம (தனம). **சிலேடை:**—10, 12, மறைதது 11 காட்டல்.

**கேட்டார்ப்** பிணிக்கவும் கேளாரும் சொல்வன்மை கேட்டுமனம்
வேட்டார்ப் பவுமசொலும வள்ளுவா வாழ்நகர் மினனனையாய !
நாட்டார் புகழுநின் னுட்டதனை நாடி நலஞ்செறியக்
காட்டாது தாளத்தை மட்டுமுன காடடும் கருததெதுவே? 65

**துறை:**— நாட்டத்தை (கண்ணே), தாளத்தை - அதுபோலுந் தனததை. **சிலேடை:**— ஆட்டத்தைக் காட்டாது தாளத்தை மாத்திரம காட்டல்.

**வினைத்தூய்மை** வேணடிய எலலாந தருமெனும் மேதகுசீர
அனைத்தையும் கூறும் திருவள ளுவர்நாட் டணி மணியே !
முனைததே கரததுமான் கொணடுபொன் னஞசிலை முந்துதலால
நினைத்தேவர் தம்முள்மா தேவனென றெண்ணுவன நீனிலததே. 66

**துறை:**—மான - கண், சிலை - மலை (தனம). **சிலேடை:**—மானைக் கையிலேந்திப பொனவில்லை (சிலை) முந்திக் காட்டலால் நீ மகாதேவனாயினை.

**வினைத்திட்ப** மெனப மனததிட்ப மெனன விளஙகுகுறள
தனைததந்த வளளுவா வாழ்மயி லைபபதி சார்மயிலே !
முனாததிரு வேஙகட முனகாட டினையஙஙன மூன்றுமனபால
பினர்த்தெரி யததிருக காளததி கைவிட பேறுதறகே. 67

துறை:—திருவேங்கடம் - அம்மலை (தனம்); எம் + கடம் எனினுமாம். திருக்கு ஆள் அத்தி - கண்ணாகிய கடலை. சிலேடை:— திருவேங்கடமலை காட்டினை; திருக்காளத்தியையும் காட்டு.

சூட்சி முடிவு துணிவுறல் தீதிற் றூங்கலென
மாட்சி வினைசெய் வகைசொலும் வள்ளுவர் வாழ்க்கையனாய் !
காட்சியா மாழி குடங்கைக் கரந்தெனக் காசினியில்
ஆட்சி மலையமுங் கைக்கொளில் நீயிங் ககத்தியரே. 68

சூட்சி-சூழ்ச்சி. துறை:— ஆழி - கடல் (கண்), மலையம்-மலையின் (தனத்தின) அழகு. சிலேடை:— கடலை உள்ளங்கையில் ஏற்றது போல, மலய மலையையும் ஏற்றால் நீ அகத்தியராவாய்.

அன்பும் குடிப்பிறப் பும்வேந் துளத்தில் அவாவுபண்பும்
என்பவை தூதியல் என்றிசை வள்ளுவர் ஏத்தனையாய் !
முன்பிங் குனது கரத்தங்கண் மூடும் முறுக்குளநீ
பின்பென் பலர்காண வும்பலைக் காட்டிய பேதைமையே.69

துறை:— அங்கண் - அழகிய கண், உம்பல் - யானை (தனம்).
சிலேடை:— அங்கு (அங்கண்) தடுத்த நீ, பின்பு என் பல்லைக காட்டுகிறாய (கெஞ்சுகிறாய்)? உம் - உன் வழுவமைதி.

மன்னரைச் சேர்ந்தொழு கற்கண் அனற்காய் வகையுவமை
நன்னர் நவில்திரு வள்ளுவர் நல்வள நாடனையாய் !
முன்னிரண் டாம்பலை மொய்ம்புறக் காட்டி முடுக்கியநீ
பின்னிரண் டாம்பலைக் கைக்கொண்ட தென்னெனப் பேசுவதே? 70

துறை:— ஆம்பல் - யானை (தனம்), ஆம்பல் - நீலமலர் (கண்). சிலேடை:—ஒரு முறை ஆம்பலை முன்னே காட்டிய நீ, மறுமுறை ஆம்பலைக் கைக்குப் பின்னே கொண்டதேன ?

குறிப்பறி வானேயிவ் வையக் கணியெனக் கூர்மதியாற்
குறிப்பறி தற்கண் குறிதிரு வள்ளுவர் கொள்கையனுய் !
நெறிப்படு பந்திங் கிருவரை நீக்கிய நீமகிழ்ந்தே
மறிப்புறும் அம்மானேக கைககொணட தென்ன மதியிதுவே? 71

துறை:—பந்து, வரை - இவைபோன்ற தனம், மானே-விழியை.
சிலேடை:—முறையான பந்து (உறவினர்) இருவரை நீத்து, மறிபபுறும மானே ஏன நீ கைக்கொண்டாய்?

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லென் றவையறிதல்
சுவையுறச் சொல்லும் திருவள் ளுவருறை சூழலனுய்!
புவியினில் நீதன தானம் புரிந்தே பொலிவுபெற்றும்
நவையில்கோ தானம்நின் கைம்மறித் தாலென்ன நாயமிதே ? 72

துறை:—தனம - அவ்வுறுபபு, கோ - கண். சிலேடை:—தனம - செல்வம், கோ - பசு. தன தானம செய்யும நீ கோ தானத்தை ஏன் மறித்தாய்?

கற்றறிந் தும்அவை யஞ்சுவர் கல்லார் கடையெனவே
சொற்றவை அஞ்சாமை சுட்டிய வள்ளுவர் சொல்லனேயாய்!
மற்றுநீ அங்கண் பொதிகை மறைத்தாய்; மறைவளரும்
நற்றமிழ்க் கும்ப வரைமுனம்நாட்டினே;நன்றென்பனே.73

வரி 2. சொற்று - சொல்லி. துறை:—கண்ணேப பொதியுங்கை; வரை - மலே (இதுபோன்ற தனம்). சிலேடை:—பொதிகை மலேயை மறைத்துக் கும்பவரை (அகத்தியரை) நாட்டியது நன்று.

தள்ளா விளேயுளுந் தக்காரும் செல்வமும் சாரிடமே
எள்ளாத நாடென் றிசைவள் ளுவர்பா இசையனேயாய் !
கொள்ளத் தகுதண் ணளிகை மறித்தே கொளாமுறையில்
வள்ளற் றனம்வெளி வைத்தனே; என்னவுன் மாயமிதே?74

**துறை:**— அளி-வண்டு (கண்), தனம் - அவ்வுறுப்பு. **சிலேடை:**— தண்ணளி - கிருபை. இதைவிட்டுவிட்டு, வள்ளற்றனத்தை (கொடைச்சிறப்பை)க் காட்டுதல் மாயம.

அரண்சேர் அகல முயர்வுதிண் மைசார் வருமையின்னான்(கு)
உரன்சார் வெனவே உரைவள் ளுவரூர்க் குயிரனையாய்!
வரன்சாரத் தெய்வானை நிற்கமுருகெனும் வாய்ப்பினங்கண்
திரன்சார வள்ளியைக் கைப்பற் றினைநீ திறம்பெறவே. 75

**துறை:**—தெய்வ ஆனை - தனம்; அம்கண் - அழகிய கண்ணை; வள இயைக்கை - வணமையான இயைபுள்ளகையால். **சிலேடை:**— தெய்வானையிருக்க, அங்கே வள்ளியைக் கைப்பற்றியது, முருகன் எனும் தன்மையிலென்க.

பொருள்செய் வகையில் அறத்தொடின பினும் பொருளெனவே
தெருளுறச் சொல்வள ளுவாவாழ் மயிலைத் திருவனையாய் !
இருளில் ஒளிதிகழ் சத்தியம் கைக்கொண் டெதிர்ப்பவர்க்கே
அருளிற் பெரும்பொறை ஆற்றினை காந்தி அடிகளொத்தே. 76

**துறை:**—சக்தி - வேல் (கண்); அங்கை - உள்ளங்கையில்; பொறை - மலை (தனம்). **சிலேடை:**—சத்தியத்தை மேற்கொண்டு எதிரிகளுக்குப் பொறையே காட்டலால் காந்தி யடிகளை ஒத்தாய்.

மன்னவன் செல்வத்து ளெல்லாந் தலைபடை மாட்சியெனச்
சொன்ன திருவள் ளுவர்வாழ் மயிலைச் சுடர்த்திருவே !
மின்னுபொற் கிண்ணம் விடுத்தனை பாலங்கண் மேவுகையால்
பன்னு வரைமகள் நீ; நான்சம் பந்தனும் பான்மையனே. 77

**துறை:**— பொற்கிண்ணம் - அதுபோன்ற தனம். பால் - பக்கத்தில்; அம்கண் மேவுகையால் - அழகிய கண்ணைச் சேருங் கையால். **சிலேடை:**—பொற்கிண்ணம் அளித்து அதிற்பாலும் சேருதலால், நீ பார்வதி யாயினை. வரைமகள் - மணப்பெண், சம்பந்தன் - தொடர்புடையன் என்பன தொனிப்பொருள்.

பாரில் விழுப்புண் படாநாள் வழுக்காப் படைச்செருக்கின
சீரிந் குறைத்த திருவள் ளுவர் புகழ்த் தேசனையாய்!
போரிற் றனமுனே பூட்டிக்கை பூவணற் போற்றிமகிழ்
நேருற் றிடுமனைப் பொன்னனை யாளா நிகழ்த்துவனே. 78

துறை:—தனம் - அவ்வுறுப்பு; பூ அணல் - பூப்பொருந்துதலை (கண்ணைச் சேர்தலை). சிலேடை:— போர்போற் செல்வத்தைத் தந்து கையாற் பூவணனைப் (திருப்பூவண நாதரை) போற்றுதலால் நீ பொன்னனையாளெனக.

முகநக நட்பது நட்பன் றெனநட்பின் மொய்ம்பெடுத்து
மிகமிகச் சொல்வள் ளுவர்வாழ் மயிலை விளக்கனையாய்!
நிகரில் விமலை பிறப்பிடம் காட்டிய நீகரத்தால்
தகவிற் கமலை பிறப்பிடம் என்னோ தகைந்ததுவே? 79

துறை:—விமலை - உமை, பிறப்பிடம் - மலை (தனம்), கமலை - இலக்குமி. பிறப்பிடம் - கடல் (கண்). சிலேடை:— பார்வதி பிறப்பிடம் காட்டினை, லக்ஷ்மி பிறப்பிடம் ஏன் மறைத்தாய்?

கேட்டி னுறுதிநட் பாரய் தலின்கட் கிளைஞரையே
நீட்டி யளப்பதோர் கோலெனும் வள்ளுவர் நீதியனாய்!
சாற்றிய நீயதி காரி;கண் மூடித் தனந்தெரித்தல்
ஏற்ற மிலாச்செயல்; இங்கிது சற்றும் இயைபிலையே! 80

துறை:—காரி - விடம், விடமாங் கண்ணை மூடித் தனத்தைக் காட்டல் சிலேடை:— அதிகாரியாகிய நீ கண மூடித்தனம் (அறியாமை) காட்டல் சற்றும் இயைபில்லை.

கிழமையைக் கீழ்ந்திடா நட்பாம் பழமை கெழுமியெனப்
பழமை பகர்திரு வள்ளுவர் வாழ்நகர்ப் பண்பனையாய்!
தழுவுறு நின்கைகோ பாலனம் செய்யத் தரணிமிசை
வழுவற நீ மலை யேந்தினை கண்ணனும் மாண்பினிலே. 81

துறை:—கோ (கண்ணை), மலை - தனம். சிலேடை:— கோ - பசு. நீ பசுக்களைக் காப்பாற்ற (கோவர்த்தனம்) மலையை ஏந்தினை கண்ணனைப்போல.

கனவினு மின்னு வினைவேறு சொல்வேறு காண்பவர்நட்(பு)
எனுமுறை தீநட் பினிற்பகர் வள்ளுவர் ஏற்றமனாய்!
தனதெனத் தங்கை தமக்கை வரவுந் தழைப்புறு நீ
முனமென் னுறவரை ஏன்புறம் பாக்கி முடுக்கினையே? 82

துறை:—தமக்கை தம அக்கை - உன்கை உனகண்ணை; சிலேடை:—வரை - மலை (தனம்). உன் தங்கை தமக்கைகள் வரவு மகிழும் நீ, என் உறவினரை ஏன் புறம்பாக்கி முடுக்கினை? தம - தன வழுவமைதி.

பலவாங் கலைகற்றும் கூடாநட் பார்மனம் பண்படுதல்
இலரே எனுந்திரு வள்ளுவர் பாவுறும் இன்பமனாய்!
நலமே விராமமாக் காவியம் கைபுறும் நாயகியே!
புலமே விலக்கு வரைநீ விடுத்தல் பொருத்தமின்றே. 83

துறை:—நலமே விராம (விராவும்) அமாக் காவி (நீலம்-கண்). அமகை - உள்ளங்கை, வரை - தனம். சிலேடை:—நலமமேவு இராம மாக்கதை கைக்கொண்ட நீ, இலக்குவரை ஏன விடுத்தனை?

எய்தரும் ஊதியம் விட்டே தங் கொள்ளல் எனைவருக்கும்
மைதரு பேதைமை யென்றுரை வள்ளுவர் வாழ்வனையாய்!
நெய்தலைக் கைக்கொடு நீஎன்முன் வண்கலை நீட்டுதலால்
மெய்வரு சாலியள் என்றுனை நாளும் வியக்குவனே. 84

துறை:—நெய்தல் - நீலம் (கண்); கலை - கல்லை (தனத்தை). சிலேடை:- நெய்தற்றொழிலை மேற்கொண்டு நுண்ணிய கலையை துணியை)க் காட்டலால் நீ சாலியப்பெண் ஆவை. சாலி - அருந்ததி. தொனி.

அறிவின்மை இன்மையு ளின்மையரப் புல்லறி வாண்மைபுகல
திறஅறி வாளியாம் திருவள் ளுவர்குறட செவ்வியனாய் !
மறைவா மழைக்க ணுறக்கைகோ வத்தனம் வைத்தனை ; இந்
நிறைவினிற் கோபால னென்றுனைப போற்றுவன் நேரின்றியே!. 85

**துறை:**—மழைக்கண்-குளிர்ச்சியுள்ள கண், கையுற மறைவா - கைக்குள உறறு மறைய, கோ அத் தனம - சிறப்புளள தனம. **சிலேடை:**— மழையினிடத்தில் ஆ மறைவுறக் கையிற் கோவர்த் தனகிரி ஏந்தினை; ஆதலிற் கோபாலனாகுவை. அ-சிறப்புச்சுட்டு.

இகலெனுந் துனபத்திற் றுன்பங் கெடிலவரும் இன்புளின்பு
மிகலெனு மெய்தெரி வளளுவர் வாழ்க்கையின் மேதையனாய்!
வகைதரு சூத மலையென்முன் வைத்தனை; மாமருவும்
தகைதரு நல்வடுக் கைம்மறித் தாலென்ன சால்பிதுவே? 86

**துறை:**—சூது - சூது கருவி(தனம), அமமலை - அழகிய தனம்; வடுவினை - அதுபோனற கண்ணை. **சிலேடை:**—சூதம - மாமரம, மலை - மிகுதி என முன மாமரக்காட்டைக் காட்டி வடுவை மறித்ததேன்?

வலங்கொள் பகைக்குமா றேரம்புகென் றேபகை மாட்சிமிகு
நலங்குறி வள்ளுவர் வாழ்மயிலை வள நாடனையாய் !
இலங்கையி லார்சிறை யெய்துகை யிற்புவி எய்தவரும்
குலங்கொள் தனமுனைக்கூடலிற் சீதையாக கொண்டுய்வனே. 87

**துறை:**—அயில் - வேல் (கண்) ஐயில் - போலி, தனம் - அவ் வுறுப்பு. **சிலேடை:**—இலங்கையிற் சிறைப்படுதலாலும, பூமிக்குப் பெண்ணாய் பிறந்த அந்தக் குலப்பெருமை (தனம - தன்மை) கூடலாலும், நீ சீதை யாயினை.

பகையினிற் சொல்லே ருழவர் பகைகொளற் பாலதன்றூப்
பகையின் திறந்தேரி நல்பகர் வள்ளுவர் பாடலனாய் !
தொகையிமை யோரைநீ கைம்மறித் திட்டனை; தோன்றஎன்முன்
நகைதரு சொர்க்கம விடுத்தனை பேரின்பம் நண்ணுதற்கே. 88

துறை:—இமையோர் - இமையையுடைய கண்கள், சொர்க்கம் - தனம். சிலேடை:—தேவர்களை (இமையோரை) மறிந்து, என்முன சொர்க்கம் அளித்தனை.

வாள்போற் பகைவருக கன்றுட் பகையா வருங்கபடக
கேள்சால அஞ்சு கெனும்வள் ளுவர்வரைக் கிள்ளையனுய்!
ஆளுறு நாடக நற்கலை நாட்டினை; அம்ம!என்முன்
மூளுறு காவியம் கைம்மறித் திட்டாய்; முறையிலையே. 89

துறை:—கலை - கலை (தனத்தை), காவி - நீலமலர் (கண்); சிலேடை:—நாடகக் கலையைக் காட்டிய நீ, காவியத்தை மறித்தல் முறையில்லை.

பெரியோர்க் கிழைபிழை கூறறதனைக் கைவிளி பேதைமையாப
பெரியோர்ப் பிழையாமை பேணிய வள்ளுவர் பேச்சனையாய்!
தெரிவாற் கடலை அவித்தணி அத்திரி சேர்பெருமை
விரிவாககு நீஅநசூயையாக் காண விளங்கினையே. 90

துறை:—கடலை - கண்ணை, அத்திரி - மலை (தனம்). சிலேடை:—கடலையை அவித்து, அததிரி முனிவரைச் சாரும் பெருமை விரிதலால், நீ அநசூயை ஆயினை.

பெணவழிச் செலபவன் ஆணமையிற் பெண்மை பெருமையதாப
பெண்வழிச் சேறற் பிழைபேசு வள்ளுவா பேறனையாய்!
பண்ண வரைமுனம் நீத்திட்டு மாயம் படர் இருவன்
கண்ணரைக் கையிடைக் காததனை; என்ன கருத்திதுவே? 91

துறை:—வரை - தனம், கண்ணரை - கண்களை. சிலேடை:—திருந்தியவர்களை நீத்து, மாய வனகண்ணரை (கொடியரை) ஏன் கைக்கொண்டாய?

பூரியர் ஆழ்அள றுவரை வில்மகள் புன்னலமே
சேரியல் பென்ற திருவள் ளுவர் குறட் செல்வமனாய் !
நேரிய மாமலை யங்காட்டி வைகைகண் நேருதலால்
சீரிய கூடற் குரியையென் றேநினைச் செப்புவனே. 92

அளறு - சேறு, நரகம். துறை: — மலை அம - தனத்தழகு, வைகை - வைக்கின்ற கை, கண் - கண்ணை. சிலேடை:— மலய மலையைக் காட்டி, அங்கே வைகையும சேருதலால், நீ மதுரை (கூடலு)க் குரியவள. கூடல் - மணமபுரிதல். தொனி

கள்ளுண் பவர்துஞ் சினர்வே றலர்நஞ்சு கள்ளெனவே
கள்ளுறு மைதெரி வள்ளுவர் வாழ்வரைக் கற்பகமே !
வள்ளற் றனநேரு மேரு சுதந்திர மாண்புணர்த்தத்
தள்ளியங் கண்கைம மறித்தஇத் தனமைஎன் சாற்றுவதே ? 93

துறை:—மேரு நேரும தனம சுதந்திர மாண்புகாட்ட; அமகண் - அழகிய கண்ணை. சிலேடை:—வள்ளற்றன்மையுடைய மேரு நிகரான பண்டித நேரு, சுதந்திரம உணர்த்தவும், நீ அதை அங்கு கையால் மறித்தல் ஏன் ?

தூண்டிலிற் பொன்மீன விழுங்கலொக் குமவெற்றி நூதிலைத்
தூண்டியம் மெய்நனி சொலவள ளுவர்வரைத் தோகையனாய் !
நீண்டுள அம்பினைநேர்கை மறைத்தனை; நீதகவிற்
காண்டகு புற்புதம் காட்டினை; அற்புதக் காட்சியிதே. 94

துறை:— அம்பு - கண், புற்புதம-நீர்க்குமிழி (தனம). சிலேடை:— அமபு - நீர். நீரைமறைத்து நீர்க்குமிழி காட்டல் அற்புதம்.

வளிமுதல் மூன றும்நோய் செய்யும் மிகைகுறை வாய்க்கிலெனத்
தெளிய மருந்தினிற் செப்பிய வள்ளுவர் தேற்றமனாய் !
ஒளிவுறக் காவியங் கையுள் ஒடுக்கியென் னுள்ளுவந்து
கனிமணி மேகலை நீசிலம் போடுமுன் காட்டினையே. 95

வளி - வாதம். துறை:—காவி - நீலமலர் (கண்), மேகலை-இடையணி, சிலம்பு - மலை (தனம்). சிலேடை:— காவியத்தை மறைத்தாயேனும் மணிமேகலை சிலப்பதிகார நூல்களை முன்னே காட்டினை.

பழங்குடி பண்பிற் பிரிதலின் றென்னப் பகர் குடிமை
வழங்குசீர் வள்ளுவர் வாழ்மயி லைப்பதி வாழ்வனையாய்!
முழங்கு பொற் கோபுரம் முந்துறக் காட்டினை; மூண்டுமனம்
அழுங்குறக் கைவாயிற றிட்டி மறைத்தாய்; அறமிலையே. 96

துறை:—பொற்கோபுரம் - தனம்; கைவாயில் - கையாம் இடத்தில்; திட்டி - (கண்ணை). சிலேடை:—பொற்கோபுரம் காட்டி, கையினால் திட்டி வாயிலை (சிறு வாசலை) மறைத்தாய். வாயினால் திட்டி - தொனி.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னவர் மானம்வரின்
உயிர்நீப் பவரென்று மானம்சொல் வள்ளுவர் ஒப்பனையாய்!
குயங்கெழு கோங்கு குறிஞ்சி தெரிக்கவும் கூறுதினை
மயங்குமா றென்கொல் கடல்மேற் கமலம் நீ வைத்தனையே? 97

துறை:—குயம் - தனம், கோங்கு - தனம், கடல் - கண், கமலம் - கை. சிலேடை.—கோங்கு குறிஞ்சித்திணை காட்ட, கடலும் கமலமும், நெய்தலும் மருதமும் காட்டித் திணைமயக்கம் வந்தது.

பணியுமாம் என்றும் பெருமை எனவே பகர்பெருமை
துணியுமா கூறும் திருவள் ளுவர்வரைச் சூழலனாய்!
அணிகையங் காவி அலர்ந்தே இருவரை அண்ணுறுநீ
தணிகையிற் செங்கல்வ ராயனைச் சாற்றும் தகையவளே. 98

துறை:—காவி - நீலமலர் (கண்), இருவரை - பெரியமலை (தனம்). சிலேடை:—காவிமலர் தலைப்பூவாக, வள்ளிதெய்வானையைச் சேர்தலால், நீ திருத்தணிகைச் செங்கல்வராயனெனத் தக்காள்.

கடனென்ப சான்ருண்மை கொள்வார்க்கு நல்லவை காசினியில்
திடனென் பதுசொலும் வள்ளுவர் மாநகர்த் தெய்வமனுய்!
கடனஞ்சு கையாற் றடுத்தே அமுத கலசமென்முன்
விடநெஞ்சுகந்தாய்; விழுமிய தென்று விளம்புவனே. 99

துறை:—நஞ்சு - விடம (கண்), கலசம - அது போன்ற தனம. சிலேடை:-கடலில எழுந்த விஷத்தை மறித்து அமுதகலசத்தைத் தந்தது விழுமியது.

ஆன்ற குடிப்பிறப் பன்புடை மையிவை ஆமிரண்டில்த்
தோனறிநம பண்புடை மையெனும வளளுவர் சொல்லனையாய்!
ஏன்ற வரையிணை ஈந்து நீ காரிகை ஏற்றலின்மெய்ச்
சான்றின் வரைதரு காரிகை யாவுனைச் சாற்றுவனே. 100

துறை:—வரை - மலை (தனம), காரி - விடம (கண்). சிலேடை:—வரை தரலாலும காரி கை ஏறபதாலும, நீ வரைதரு காரிகை (பாாவதி). மணபபெண் எனபது தொனிப்பொருள்.

நன்றியில் செல்வம் நடுவூர்ப் பழுத்தபாழ் நச்சுமரம்
என்றியமபும்வள் ளுவர்வாழ் மயிலை இயலையொப்பாய்!
பொன்றிணி கோபுரம போந்தெதிர் காட்டினை; பூவகரத்தால்
மின்றிகழ் கோபுரம் ஏன்மறைத் தாயிது விம்மிதமே. 101

துறை:—கோபுரம் - அது போன்ற தனம்; கோ புரம் - கண்ணுகிய இடம சிலேடை:—ஒரு கோபுரத்தைக் காட்டி மற்ருெரு கோபுரத்தை மறைத்ததேனே?

ஆணியாம் நாணம்அஃ தின்றேற் பிணியென் றரியவுரை
நாணுடை மைக்கண் நவில்வள் ளுவர்நகர் நாயகமே!
மாணுறு மாறுசீ சைலமுன் வைத்து மகிழ்ந்தெளியேன்
காண விழைநீல கண்டனைக் கைம்மறை காட்சியென்னே? 102

துறை:— சைலம - மலை (தனம); கண்தனை - கண்ணை. சிலேடை:— ஸ்ரீசைலத் தலத்தைக் காட்டி, நீலகண்டரை மறைத்தது என?

குடிசெய் வகைஆள் வினையும் அறிவுங்கை கூட்டுமெனும்
படிசெய் புகழ்வள் ளுவர்மயி லைபிறப்பூம் பாவையனே !
நெடியமா லுந்திக் கமல முறுகை நிகழ்த்தலொடு
படியில் மறைத்தனை காட்டினை வேதனும் பான்மையினே. 103

துறை :— மால் உந்தி - மயக்கம் தந்து : கமலம் - அது போன்ற கண்; படியில் - ஒப்பில்லாத; மறைத்தனம்-மறைத்தற் குரிய தனம். சிலேடை :— திருமாலின் நாபிக்கமலத்தில் வந்து, பூமியில் (படியில்) வேதமாம் செல்வந் தந்து பிரமனாகிறாய்.

உழுதுண்டு வாழ்வாரேவாழ்வார்மற்றெல்லாம்உழுபவர்பின்
தொழுதுண் பவரா உழவுசொல் வள்ளுவர் தூய்மையனே !
பழுதறு கற்கண்டென பால்முன படைத்தும்பப் பானமையினிற்
பழமிகு சக்கரை ஏன்கை வழங்கிலை ப்பாங்குறவே ? 104

துறை :— கல் - மலை (தனம); சக்கர் - கண்கள். சக்கு-கண். சிலேடை:— கற்கண்டு வழங்கியதுபோலப் பழம சர்க்கரை ஏன் தரவில்லை ? சக்கரை - போலி.

நல்குர வின்றதா யாலும் பிறர்போல நாடலுறும் ;
நல்குர வின்தீமை காணெனும் வள்ளுவர் நாட்டமனே !
புல்கிய பொன்முடி போக்கிநீ இக்காலப் போக்கினைய
மல்கிய தேனார் குடியர சைக்கை வகித்தனையே. 105

துறை :— பொன்முடி - அதுபோலும் தலை; தேன் ஆர் குடியா - மதுவை நிரமபக் குடிபபவர், எனவே, வண்டுகள் (கணகள). சிலேடை :— பொனமுடியைப போககிவிட்டு, இக் காலத்துக்கேறபக குடியரசைக் கைககொண்டனை.

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல் இலர்முனெனுந்
தரத்தில் இரவு பகர்திரு வள்ளுவர் சால்பனையாய்!
கரத்தில் நயநத்தைக் கட்டிமுன் சக்கரங் காட்டியநீ
வரத்தில் உயர்திரு மாலாக நானுமால் வாய்ந்தனனே. 106

**துறை:—** நயநத்தை - கண்ணை; சக்கரம - சக்கரவாகப பறவை (அதுபோனற தனம). **சிலேடை :—** சங்கை (நத்தை)க் கைக்கொண்டு சக்கரத்தையும காட்டலால் நீ திருமாலாயினை. நானும் மால் (மயக்கம) கொண்டேன. மால் - தொனிநயம்.

இரவச்சத் தின்கண் கெடுக உலகம் இயற்றியவன்
இரவுற் றுயிர்வாழ் வெனிலெனும வளளுவர் எண்ணனையாய்!
புரவினி லக்கிய னுடிக்கைக் கொள்நீ புரிந்தெதிரே
பரவு வரையி னிலககணம் காட்ட லும் பண்புடைத்தே.107

**துறை :—** அக்கு இயல் நாடி - கண்ணழகை விருமபி; வரையின் - மலையினது (தனத்தினது) சிலேடை :— இலக்கியத்தை நாடிய நீ, பரந்த வரையறுதத இனிய இலக்கணததையும காட்டல். நாடி னுடி சிலேடை பறறி வந்த நன அமபதம.

கயவர் அவல மிலர்நன் றறிவாரிற் காழ்த்ததிரு
நயமை உடையா ருளரெனும் வள்ளுவர் காட்சியனாய்!
நயமா இரும்பொறை நாட்டியு மென்முனே நாட்டுவகை
வயமா வலிய விடங்கை பொதிந்தது வஞ்சனையே. 108

காழ்த்த - முதிர்ந்த. **துறை :—** பொறை - மலை (தனம்). விடம் - கண். **சிலேடை :—** பெரும பொறுமை மேற்கொண்டும, நீ விஷத்தைக் கையில மறைத்தது வஞசனையாகுமா.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லென்று மாலுநெஞ் சாதல்தகை
அணங்குறுத் தற்கண் அறைதிரு வள்ளுவர் ஆட்சியனாய்!
குணங்கொளும் ஈகையுற் றாய;தனங் கொள்கிலை கோமளமே!
கணங்கொளும காமர் கொடைமடம எங்குநீ கற்றனையே? 109

துறை :— ஈ - வண்டு (கண்); தனம் - அவ்வுறுப்பு, சிலேடை:— ஈகைக் குணங் கொண்டாய்; செல்வம் (தனம்) போற்றவில்லை. இவ் வழகிய கொடைமடம எங்கே கற்றாய்?

குறிப்பறிதறகண்இணைக்கணோக கொககின்வாயக கூற்றமென்னொன்(று)
உறப்புகல் வள்ளுவர் ஒண்மயி லைப்பதி ஓவியமே!
திறத்தொடு கூவிளம யாபபிலென முன்னர்த் தெரியவைத்தே
மறைத்தலென கையாற் கருவிளம் ஆங்கண் மறிப்புறவே. 110

துறை:- கூவிளம - வில்வக்காய (தனம); யாப்பில் - சேர்க்கை யாக; கரு விள அம ஆம கண்-கரிய விண்ட அழகுள கண்ணை. சிலேடை:— யாப்பிலக்கண ததில் கூவிளம தெரியவிட்டுக் கரு விளத்தை அங்கு (ஆஙகண) மறைத்தாய்.

உணர்ச்சி உயிர்த்துண்டு கண்டுகேட்டுற்றைந்தும் ஒத்தலெனப்
புணர்ச்சி மகிழ்தலைப் போற்றிய வள்ளுவர் போற்றனையாய்!
மணக்கவி னைவரை மாலை யிடத்தந்து மாமயர்வில்த்
துணைக்கையங் கண்மிசைத் தூககினை யால்நீ துரெளபதியே. 111

துறை:—ஐ வரை - அழகிய மலை, (தனம); மாலை இட-மயக்கந் தர; கை அஙகண்மிசை - கையை அழகிய கண்மேல். சிலேடை:— ஐவரை மாலையிட்டும், நீ மிகுந்த கலக்கத்தோடு இரு கைகளை அங்கு (அங்கண்) மேலே தூக்கினையாதவால் துரௌபதியாயினை

அனந்தரு தூவி அனிச்சம் நெருஞ்சி அடிக்குநலம்
புனைந்துரை இங்ஙன் புகல்வள் ளுவர்பதிப் பொற்பனையாய்!
வனைந்து முலைவளம் வைத்தனை; முன்கோ வளமறித்தாய்;
நினைந்து புரிசெயல் நினனிடை இல்லையாம நேரிழையே! 112

துறை :— முலை - அவ்வுறுப்பு; கோ - கண்- சிலேடை:— முல்லை யின் சிறபபை முனவைத்தாய், பசுக்களின (கோ) வளப்பதனை மறிததாய். முலை - இடைக்குறை. இடை இல்லை - தொனி.

போதரு கண்மணிப் பாவை!பா வைக்கிலை போற்றிடமாக்
காதற் சிறப்புரைத் தல்சொலும் வள்ளுவர் காப்பனையாய்!
நீதரு வானிள நீரிரண் டென்முனர் நீட்டியுங்கை
ஆதர வாக்கண் திறந்திலை தாகம் அகற்றுதற்கே. 113

துறை :— இளநீர் - அதுபோன்ற தனம்; கண் - கண்ணை. சிலேடை :— தாகத்துக்கு இளநீர் தந்தும, கண திறககவில்லை.

மாணக் கடுங்காம முற்ருருக கேமம் மடலெனவே
நாணுந் துறவுரைத் தல்சொலும் வள்ளுவர் நாவனையாய்!
பேணிய தங்கச் சிமிழ்காட்டி வாசம் பெறுபுழுகைக்
காணிய அங்கண் விடுத்திலை நாம்மணம் காண்பதற்கே.114

துறை:—சிமிழ - அது போனற தனம், வாசம - வசித்தல், பெறுபு - பெறறு, உழுகை - மேறபடர்கை, காணிய - காணு தறகு சிலேடை:—தஙகச்சிமிழைக காட்டினை; அதில் (அஙகண்) வாசனை பெறும புழுகை விடவில்லை. மணம காண்பதற்கு - திருமணம புரிய; தொனிபபொருள.

அலரேழ ஆருயிர் நிற்கும் பலரறி யாரதையென்(று)
அலரறி விங்குறுத் தல்சொலும் வள்ளுவர் ஆர்வமனுய்!
புலவரை நாட்டினை; சன்மானங் கைவிடிற் பூதலத்துன்
நலவரைப போற்றும நயமிக நனறெனறு நாட்டுவனே. 115

**துறை:**—வரை - தனம், சன்மான - நல்ல கண். **சிலேடை:**—புலவரை நாட்டினை; சன்மானம் கையிற பெயதால் நனறும்.

ஆற்றாது நீங்கினும் காமம் சுடுமென் றறிய பிரி(வு)
ஆற்றாமை சொல்திரு வள்ளுவர் வாழ்வரை ஆரணங்கே!
மாற்றார் தனத்தைப்பெருந்துறைக்கேமணிவாசகர்போற்
போற்றா தளித்தனை;வாங்கு திரைவரப் போந்தருளே. 116

**துறை:**—மாற்று ஆர் தனம் - மாற்றுயர்ந்த தனம பெருந் துறை - வெற்றவெளி, வாங்கு திரை - வளைந்த அலை (கடல் - கண்). **சிலேடை:**—உனனில வேறுள அரசர் பணத்தைத் திருப் பெருந்துறையில் போறறாது விட்டாய்; வாவும (வாம) குதிரை வரபபண்ணு மணிவாசகரைப போனறு. வாவு - தாவும.

அலிந்கரு வெம்படர் ஊற்றுநீர் ஆருமென் றுய்ந்துபடர்
மெலிந்திரங் கற்கண் விளம்பிய வள்ளுவர் வேதமனாய்!
மலைதந் தனைநனி வேட்டம் புரிய; மயலுடனே
அலைதரு மானையும் கைவிட்டுக் காட்டிங் கணிபெறவே.117

**துறை:**—மலை - தனம வேட்டம - வேட்டை, மானை - கண்ணை. **சிலேடை:**—வேட்டையாட மலையைத் தந்தாய்; மானையும காட்டு; வேட்டம - திருமணம்; தொனிபபொருள்.

மதர்ப்புறு கண்ணிணை மாமுகலென் எனனுமிவ் வாசகம்கண்
விதுப்பழி தற்கண் விரித்துரை வள்ளுவர் வீறனையாய்!
துதிப்புறும் அககதை நீகை மறித்தனை; தூய்மையுறும்
விதிப்படி பூரண கும்பம் விடுத்ததென் விள்ளுதியே. 118

**துறை:**—அக்கு அதை - கண்ணை. பூரணகுமபம் - நிறைகுடம் (தனம்). **சிலேடை**:—அக்ஷதை பூரணகுமபம இரண்டும மஙகலப் பொருள்; நீ அக்ஷதையை மறிததுப பூர்ணகுமபத்தை என காட்டினை?

பசப்பின் பருவரல் அள்ளிக்கொள் வற்றுப் பரவுமென
இசைக்கும் திருவள் ளுவர்சே ரியலின் இசையனையாய்!
அசைப்பில் தனம்புறம் ஆக்கினை; அம்ம! நீ அம்புவிகை
வசத்திற்செங் கோல்கை மருவினவ் வாடசியின் மாட்சியெனனே? 119

துறை:—தனம் - அவ்வுறுப்பு; கோல் - அம்பு (கண்) சிலேடை:— மிக்க செல்வத்தை விட்டுவிட்டு, நீ புவியாளச் செங்கோலைக் கைக்கொள்ளல் எப்படி?

இட்ரில் இருதலைக் காமம்கா ழில்கனி யென்றுநனிப்
படர்மிந் திக்கண் பகர்திரு வள்ளுவர் பாவனையாய்!
கொடியுங் கணையும முரசொடு நாணும்கைக் கொண்டுமதன்
முடியொன்றை யேதரில் எங்ஙனம் ஆட்சி முறைசெய்வதே? 120

துறை:—கொடி கணை முரசு நாண் இவை முறையே மன்மத னுக்கு மீன், மலர், கடல், வண்டு ஆவன. இவைபோன்ற கண்ணை; முடி - தனம். சிலேடை:—மன்மதனுடைய கொடி முதலிய சின்னங்களைத் தராது, முடிமட்டுந் தரில், அவன் ஆட்சி யாதாகும?

நினைந்தவர் போல்நினை யார்கொலோ தும்மலென் நீங்கலென
நினைந்தார் புலம்பலைச் சொல்வள் ளுவர்கடல் நித்திலமே!
புனைமணி மேகலை யும்சிலம் புப்புறம் போக்கிய நீ
வனைதரு காவியம் கைவரல் யாதும் மகிமையின்றே. 121

துறை:—மேகலையும சிலம்பும் - இடையணியும் மலையும் (தனமும்). காவி - நீலமலர் (கண); சிலேடை:—இடையணியையும் காற் சிலம்பையும நீத்த நீ காவியுடையைக் கைக்கொண்டது, தொனி. மணிமேகலை சிலப்பதிகாரம் புறம்போக்கி, காவியத்தேர்ச்சியுறல்.

கனவினிற் காணூர்க் கனவினிற் கண்டுயிர் நாடுமெனக்
கனவு நிலையுரைத் தல்சொலும் வள்ளுவர் கல்வியனாய்!
தனமே மிகப்படைத் தாய்முன் தெரியத் தரணிமிசை
அனமே வருசத் திரமேன் அடைத்தாய் அறமபிறழ்ந்தே? 122

துறை:—தனம் - அவ்வுறுப்பு, அனமே - விளி, சத்திரம் வாள் (அது போனற கண்). சிலேடை:—செல்வம் மிகப்படைத்தும், அன்ன சத்திரத்தை அறம பிறழ்ந்து ஏன் அடைத்தனை?

எண்டிறம் பச்செய் கொலைக்களம் மாலை எனப்பொழுது
கண்டிரங் கல் சொலும் வள்ளுவர் பாவின் கருத்தனையாய்!
புண்டரி கம்மிரு மான்பாயக் கண்டும் பொரஎதிரே
விண்டிரு கைம்மா முடுகுதல் பார்த்தும் வெருவுவனே. 123

துறை:—புண்டரிகம - தாமரை (கை), மான் - கண், கைம்மா - யானை (தனம்). சிலேடை:—இருமான்களைப புலி (புண்டரிகம்) பாய்வதையும இருயானைகள் எதிரே முடுகுதலையும நான் கண்டு பயந்தேன.

வலனுறு தோள்கவின் வாடிய தென்ன வருமுறுப்பு
நலனழி தற்கண் நவில்வள் ளுவர்நூல் நயமனையாய்!
பொலியுங் கடலணை யிட்டெதிர்ப் பார்முன் பொருசிலையே
மலையுந் தனத்தால் இராம பிரானு வயங்கினையே. 124

துறை:—கடல் - கண், அணையிட்டு - மறித்து, சிலை - மலையை, தனம் - அவ்வுறுப்பு; சிலேடை:—கடல்மீது அணைகட்டி, வில்லும் (சிலை) அமபும (ஏ) கொண்டு போா செய்யும் தன்மையால் (தனம்) நீ இராம பிரான் ஆயினை.

என்னெஞ்சே காமம் நாண் ஒன்றை விடுகென் றெழிற்றலைவி
தன்னெஞ் சொடுகிளத் தல்சொலும் வள்ளுவர் தன்மையனாய்!
சொன்ன மலையும் அமுத கலசமும் தோன்றவைத்தே
முன்னம முழுநஞ்சு கைமறித் தாய்;தயை மூணடெனக்கே. 125

துறை:—சொன்னமலை-தங்கமலை(தனம), அமுதகலசம (தனம்), நஞ்சு - கண். சிலேடை:—என முன் தங்கமலை, அமுதக்லசம, இவற்றைக காட்டி, விஷதைதை மறித்தாய்.தயைகொணடெனக.

நிறையுளம் மாய்த்தற்குக் கள்வன் பணிமொழி நேர்படையா
நிறையழி தல் கூறும வள்ளுவர் வாய்மொழி நேயமனாய்!
துறையில் இனமாம் துணைமுகை விட்டுத் தொடர்வனசம்
சிறையிந் திரநீலம் சேர்த்தலொவ் வாத செயலிதுவே. 126

துறை:—வனசம - தாமரை (கை); இனமாம துணைமுகை - தன்னினமாம இரு மொட்டுகளை (தனம); இந்திரநீலம (கண்). சிலேடை:—தாமரை, தன்னினமாகிய அருமபை விட்டு விட்டு, இந்திர நீலத்தைதப பற்றல் ஒவ்வாதது.

கண்ணுறக் கண்டபின் நீங்கும் பசப்பாக் கணவர்வயின்
பெண்ணுர் விதும்பலைப் பேசிய வள்ளுவர் பெட்பனையாய்!
கண்ணாலஞ் சார்கையைக் காட்டும அதன்முனே கனனனையே
எண்ணும வீந்ததும காட்டினை குந்திபோல் இனறெனக்கே. 127

துறை:—கண் ஆலம் - கண்ணும விஷம; கன்னனை.- கல்நனை. மலை அருமபு இவை போன்ற தனம். சிலேடை:—திருமணம் பூண் டதைதககாட்டும முன்னர்க் கர்ணனைக் குந்திதேவியைப்போல் ஈந்தனை; கண்ணாலம கல்யாணம், மரூஉ மொழி.

உறவுள உண்கண் தெரிக்கும் குறிப்பென ஓர்ந்து குறிப்(பு)
அறிவுறுத் தல்பகர் வள்ளுவர் பாவின் அகலமனாய்!
அறவே நமனெதிர் கைம்மறித் திட்டங் கரியகற்பின்
திறமாந் தனந்தந்து சாவித் திரியாத் திகழ்ந்தனையே. 128

துறை:— நமன - கண், கல்பின திறம ஆம் தனம - கல்பின் ணிடுந் திறமான ஸ்தனம. சிலேடை:—யமனைத் தடுத்து, கற்பின் தனமை (தனம) உறக்காட்டி, நீ சாவித்திரி யாயினை.

காமமோ பூவினு மெல்லி தகன்செவ்வி காண்பர்சிலர்
ஆமிப் புணர்ச்சி விதும்பல் சொல் வள்ளுவர் ஆழமனாய்!
பூமிசை ஓங்கும் பரங்கிரி காட்டிய பொறபினயற்
சேம முறுந்திரு ஆலவாய் கைவிடு சேவிக்கவே. 129

துறை:—கிரி - மலை (தனம), ஆலவாய் - விஷமுள்ள இடம் (கண்); திருபபரஙகுனறைக் காட்டிய நீ அயலே மதுரை (திரு ஆலவாய்) யை வழிபடறக் காட்டு.

அஞ்சும் பெருமை பெறிற்பிரி வஞ்சுப அறு இடும்பை
நெஞ்சு புலத்தலில் சேர்ந்துரை வள்ளுவர் நீகமனாய்!
விஞ்சு வரையே விளகக முறசெய்து மேதினியில்
அஞ்சு வரைநீ விளக்கம் அளித்தல் அழகிதன்றே. 130

துறை:—வரை - மலை (தனம). அஞ்சு வரை - ஐந்து விரல் களால், விள அக்கா - விண்ட கணணை. சிலேடை:—துஷ்டரை விளஙகவைதது, எளியரை மறித்தல்.

உப்பமைந் தற்றாற் புலவி மிகிற்சுவை ஒயுமென
அப்புல வித்திறம் போற்றிய வள்ளுவர் ஆற்றலனாய்!
ஒப்பிலாச சாமி மலைகாட் டினை;என உளந்தளர்ந்தே
எய்ப்புற வேலரை ஏன்கைய மறைத்தாய்; இயம்புகவே 131

துறை —சாமிமலை - தஙகமலை (தனம); வேலா - வேல் போன்ற கண்கள. சிலேடை:—சாமிமலையைக காட்டிய நீ அஙகுளள சுப பிரமணியரை ஏன மறைத்தாய?

இணைத்தா ரினுங்கா தலமெனற் கூடும் எனப்புலவி
நுணுக்கம் பகர்திரு வள்ளுவர் நூற்பொருள் நுட்பமனாய்!
வணக்கமில் லாத வரைமுன் வயக்கினை; மையருடன்
இணக்கந் தருகையர் என்ப துனக்கம்ம! ஏற்றதன்றே. 132

துறை:—வரை - தனம், மையர் - மையுடைய கண்கள். சிலேடை:— வணங்காதவரை விளங்க வைத்து, மையருடன் (குற்றமுள்ளவருடன்) இணங்கும் கையர் (கயவர்) ஆவது உனக்கேற்றதன்று.

ஊடுதல் காமத்துக் கின்பம் அதற்கின்ப முள்ளுவந்து
கூடலென் றாட லுவமைசொல் வள்ளுவர் கொள்கையனாய்!
நீடு வரைக்கை யடைப்பட லந்தந்து நீள்கம்பனா
நாடு வரைகாண் படலமும் காட்டினை நானிலத்தே. 133

துறை:—உடவர் - கடல் (கண்). வரை - மலை (தனம்). சிலேடை:— புகழால் நீடும் இராம லக்ஷ்மணர்களைக் கையடைப் படலம் தந்து, கம்பனைப்போல வரைகாண் படலமும் காட்டினை.

திருவள்ளுவர் ஒருதுறைக்கோவை முற்றுப்பெற்றது

# நால்வர் பிள்ளைத்தமிழ்;

**அணு 4**

சைவப் பெருந்தகை உயர்திரு S. சச்சிதானந்தம் பிள்ளை, B.A.,L.T. அவர்கள் முன்னுரையாக வரைந்த மதிப்புரையிற் கூறுவது :—

1. நால்வர் பிள்ளைத்தமிழ் என்னும் இந்நறுநூல் இப்போது வெளி வருவது மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. இதனை நால்வர்கள்பால் பற்று உள்ள *நான்கு புலவர்கள் யாத்துள்ளனர். பாடசாலைப் பரீட்சாதிகாரியாயிருந்து ஓய்வு பெற்றுள்ள திராவிடக் கவிமணி, திரு. வே. முத்துஸாமி ஐயர், M.A.,L.T. அவர்கள் சிவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நாட்டுநலப்பற்றும் இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்தன. நால்வர் சரித நிகழ்ச்சிக் குறிப்புகளும் மொழிக்கு மொழி தித்திக்கும் அவர்தம் திருவாக்குப் பகுதிகளும் இந்நூலின் செய்யுட்கள் பலவற்றிலும் செறிந்துள்ளன

2. கவிமணி உயர்திரு S. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் :— பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் எளிய இனிய தமிழில் அழகாக அமைந்துள்ளன. பருவத்துக்கொரு பாட்டு வீதம் பாடியிருப்பது இக்காலத்துக்கு ஏற்ற முறையே. செல்வன் கோதண்டராமன் கவித்திறம் பாடல்களில் நன்கு விளங்குகிறது.

3. ஆஸ்தான கவிஞர், உயர்திரு V. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் :— நால்வர் பிள்ளைத்தமிழ் மிகவும் மெச்சத்தக்க முறையில் அமைந்துள்ளது. நண்பர்கள் பலர் இதைப் படித்துப் பாராட்டினார்கள்.

## ஆசிரியர் மைந்தன் பாலகவி மு. கோ. இராமன் இயற்றியவை.

**1. காந்தியடிகள் பிள்ளைத்தமிழ்.** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில அரங்கேறியது, உயர்திரு கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ஆஸ்தானகவி ராமலிங்கம் பிள்ளை, தணிகைமணி இராவ் பகதூர் செங்கல்வராய பிள்ளை, பேராசிரியர் முத்துசிவன் முதலியோர் பாராட்டியது. அணு 4

**2. தஞ்சைப் பெருவுடையார் மாலை.** தஞ்சைப் பிரகதீசுவரர் மீது முப்பது துதிகவிகள் கொண்டது. அப்பெருமான் சந்நிதியில் அரங்கேறியது. ஆக்கியோனுக்கு பாலகவிப் பட்டம் அளித்தது. இலவச வெளியீடு.

---

*சம்பந்தர் மீது—உயர்திரு V.S. செங்கல்வராய பிள்ளை M.A.,சென்னை.
அப்பர் ,,—செல்வன் மு. கோ. இராமன், அரங்கநாதபுரம்.
சுந்தரர்,,—கவிராஜ பண்டிதர் நா. கனகராஜ ஐயர், B.O L., புதுவை.
மணிவாசகர் ,,—வே. முத்துஸாமி ஐயர், M.A.L.T., அரங்கநாதபுரம்.

# ஆசிரியர் இயற்றிய வேறு நூல்கள்

அணா

1. **தொல்காப்பியம் :** பொருள் அதிகார ஆராய்ச்சி; சேதுமன்னர் உரிமை ஏற்றது; பி. ஏ.க்குப் பாடம். 8
2. **பத்மினி :** தேச சரித்திரக்கதை; இண்டர்மீடியேட் பரீட்சைக்குப் பாடமானது. 12
3. **தனிப்பாக் கோவை :** பலவகைப் பாக்களுடையது. 8
4. **தேவிகோட்டைச் சிதம்பர விநாயகர் மாலை** முதலிய விநாயகர் துதிப்பாக்கோவை; குறிப்புக்களுடன். 4
5. **முருகன் துதிப்பாக் கோவை :** ஆறுபடை வீடுகளிலும் பிற தலங்களிலும் அமரும் குமரக்கடவுள் மீது 112 கவிகள் கொண்டது; குறிப்புக்களுடன். 4
6. **திருவாரூர்த் துதிப்பாக்கோவை :** குறிப்புக்களுடன். 6
7. **மாயூரநாதர் அந்தாதி :** குறிப்புக்களுடன். 4
8. **ஸ்ரீ சங்கர சற்குருமீது ஆற்றுப்படை : அன்புவிடு தூது** 3
9. **பர்தசரண பஞ்சகமும் பாதுகை நூற்றெட்டும்.** (ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகள் மீது) 4
10. **இராமாநுஜன் பிள்ளைத்தமிழ் :** கணிதக் கலாநிதி இராமாநுஜம் F. R. S. மீது பாடியது; கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதையர் சாற்றுக்கவி பெற்றது. 4
11. **கதையும் பாட்டும் :** இரண்டு பாகம்; (பால பாடசாலைகளுக்கேற்றவை;) தனித்தனி 4
12. **கஜாரணியேசுவரர் பதிகம், காமாக்ஷியம்மை பதிகம், அலங்காரநாயகி பதிகம், வர்கூர் வேங்கடேசர் பதிகம், முருகவேள் போற்றித் துதிகள்** முதலியன. விலை இல்லை.


**கஜாரண்யத் திராவிடக் கவிமணி**

**வே. முத்துஸாமி ஐயர்**, எம். ஏ., எல். டி.

**அரங்கநாதபுரம், திருக்காட்டுப்பள்ளி போஸ்டு.**